விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25

ஒலி 281 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 09 புதன்கிழமை (25.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

வெளிநாடுகளுக்கான
DHL பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணத்தில் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
TCN EXPRESS
208, GALLE ROAD, COLOMBO-6.
321, K.K.S.ROAD, JAFFNA.
MAIN STREET, MANNAR.
T.P: 0777 554528 (363)

## இலங்கையின் 3ஆவது பெண் பிரதமராக
## ஹரினி அமரசூரிய பதவியேற்பு

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய இலங்கையின் புதிய பிரதம ராகப் பதவியேற்றுள்ளார்.

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற அநுர குமார திஸாநாயக்கவினால் புதிய அமைச்சரவை நியமிக் கப்பட்டுள்ளது.

15



## ஜனாதிபதியின் தலைமையில்
## புதிய அமைச்சரவை நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமை யில் புதிய அமைச்சரவை நேற்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி உள்ளிட்ட மூவ ரின் கீழ் அமைச்சுக் கள் பகிர்ந்தளிக்கப்

15



# பாராளுமன்றம்
# கலைக்கப்பட்டது


## ஜனாதிபதியால் வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

அரசியலமைப்பின் பிரகாரம் நேற்று நள் ளிரவுடன் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

இது தொடர்பாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவால் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)




## புதிய ஆளுநர்கள் இன்று நியமனம்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் 9 மாகாணங்களுக்குமான ஆளு நர்கள் இன்று நியமிக்கப்பட வுள்ளனர்.

இந்த நியமனங்கள் ஜனாதி பதி அநுர குமார திஸா நாயக்கவினால் இன்று நிய மிக்கப்படவுள்ளதாக தகவல் கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## நாட்டு மக்களுக்கு
## அநுர இன்று விசேட உரை

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இன்று நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை ஆற்றவுள் ளார்.

இந்த விசேட உரை இன்று இரவு 07.30 மணியள வில் அனைத்து

15

## நவம்பர் 14 பொதுத் தேர்தல்
### ஒக்ரோபர் 4 முதல் 11 வரை வேட்புமனுத் தாக்கல்
### நவம்பர் 21 இல் பாராளுமன்றக் கன்னி அமர்வு

(கொழும்பு)

நவம்பர் மாதம் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர் தல் இடம்பெறவுள்ளது.

பாராளுமன்றத்தை ஜனாதி பதி அநுர குமார திஸாநாயக்க நேற்றிரவு கலைத்தார்.

அதன்படி எதிர்வரும் நவம் பர் மாதம் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் இடம் பெற்று, புதிய பாராளுமன்ற அமர்வு நவம்பர் 21ஆம் திகதி ஆரம்பமாகும்.

ஒக்ரோபர் 4 முதல் 11ஆம் திகதி

15

## வடக்கின் ஆளுநராக வேதநாயகன் நியமனம்
### ஜனாதிபதியின் முன் இன்று பதவியேற்பார்




(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக யாழ்.மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் ஜனாதிபதி முன்னிலை யில் இன்று பதவியேற்கவுள்ளார்.

இலங்கையின் 9ஆவது நிறை வேற்று அதிகாரமுடைய ஜனாதி

15

## நாட்டை வழிநடத்தும் ஆளுமை அநுரவிடம் உண்டு
### மகிந்த தெரிவிப்பு




(கொழும்பு)

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள அநுர குமார திஸாநாயக்கவுக்கு நாட்டை வழிநடத்தும் ஆளுமை உள்ளதாக, முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

15

## அமைச்சுக்குச் சொந்தமான வாகனங்களை
## கொழும்பு காலிமுகத்திடலில் உடனடியாக ஒப்படைக்க வேண்டும்
### ஜனாதிபதி அதிரடி உத்தரவு



(கொழும்பு)

அமைச்சுக்குச் சொந்த மான அனைத்து வாகனங் களையும் உடனடியாக ஒப் படைக்குமாறு ஜனாதி பதி அநுர குமார

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அமைச்சரவையின் செயலாளர்கள் நியமனம்

(கொழும்பு)


புதிய அமைச்சரவையின் செயலாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

புதிய பிரதமரின் செயலாளர், அமைச்சரவை செயலாளர் உள்ளிட்ட 15 அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

வழங்கப்பட்ட நியமனங்களின் முழு விபரம் பின்வருமாறு:

01. ஜீ.பீ.சபுதந்திரி - பிரதமரின் செயலாளர்
02. டபிள்யூ.எம்.டி.ஜே. பெர்னாண்டோ - அமைச்சரவையின் செயலாளர்
03. கே.டி.எஸ். ருவன்சந்திர - போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு
04. கே.எம்.எம்.சிறிவர்தன - நிதி, பொருளாதார அபிவிருத்தி,தேசிய கொள்கைகள், திட்டமிடல் மற்றும் சுற்றுலா அமைச்சு
05. அருணி விஜேவர்தன - வெளிவிவகார அமைச்சு
06. ஜே.எம்.டி.ஜயசுந்தர - கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு
07. கே.மகேசன் - மகளிர், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை அமைச்சு
08. எம்.எம்.நயிமுதீன் - வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி அமைச்சு
09. ஏ.எம்.பீ.எம்.பீ. அத்தபத்து - கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு
10. பாலித குணரத்ன - மஹீபால சுகாதார அமைச்சு
11. டபிள்யூ.பீ.பீ. யசரத்ன - நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சு
12. பீ.கே.பிரபாத் சந்திர கீர்த்தி - சுற்றாடல், வனஜீவராசிகள், வன வளங்கள், நீர் வழங்கல், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு
13. எம்.பீ.என்.எம். விக்ரமசிங்க - விவசாயம், காணி, கால்நடை , நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு
14. எச்.எஸ்.எஸ். துய்யகொந்த - பாதுகாப்பு அமைச்சு
15. டீ.டபிள்யூ.ஆர்.பீ. செனவிரத்ன - பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
16. ரஞ்சித் ஆரியரத்ன - புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத் துறை அமைச்சு
17. பேராசிரியர் கே.டீ.எம். உதயங்க ஹேமபால - வலு சக்தி அமைச்சு

(ம-7)



முன்னாள் யாழ். மாவட்ட அரச அதிபர் மகேசன் அவர்கள் ஜனாதிபதி அநுரகுமார அவர்களால் மகளிர், குழந்தைகள், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் செயலாளராக நியமனம் பெற்றுள்ளார்.

## ஜனாதிபதி ஊடகப் பிரிவுக்கு புதிய பணிப்பாளர் நியமனம்

(கொழும்பு)



ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் நாயகமாக வைத்தியர்நஜித்இந்திக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை ரன்ன மத்திய கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான வைத்தியர் நஜித் இந்திக்க, கொழும்பு மருத்துவ பீடத்தில் தனது மருத்துவ பட்டப்படிப்பை நிறைவு செய்தார்.

கடந்த 5 வருடங்களில் பல அரச வைத்தியசாலைகளில் வைத்தியராகவும் வைத்திய அதிகாரியாகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

வைத்தியர் நஜித் இந்திக்க பல்கலைக்கழக மாணவர் செயற்பாட்டாளர் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)


31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 28.08.2024(புதன்கிழமை) அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர் மாசிலாமணி லீலாவதி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 25.09.2024 இன்று புதன் கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்று, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (372)

ரமலாவத்தை, தெல்லிப்பளை.

மா.ரஞ்சித்ராஜ் 0742328400 மா.ரஸ்வின் ராஜ் 0033652638593
லோ.விஜிதா 004917629260838 மா.ரமேஷ்ராஜ் 0033753318127

குடும்பத்தினர்

நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார்துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும். (1996)

198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
077 138 7596, 071 999 9306


## வேலணை பிரதேச சபை
## சாட்டி சிந்தாத்திரை மாதா திருத்தலம் வருடாந்த திருவிழா - 2024
## பகிரங்க அறிவித்தல்

01. வருடாந்த திருவிழா 20.09.2024 ஆம் திகதி ஆரம்பமாகி 29.09.2024 அன்று நிறைவு பெறுவதனை முன்னிட்டு இக்காலப்பகுதியில் தற்காலிக வியாபார அனுமதியினைப் பெறுவதற்கு வேலணை பிரதேச சபையின் வேலணை உப அலுவலகத்தில் 27.09.2024 க்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
02. குளிர்பானக்கடைகள், தேனீர் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் நடாத்துபவர்கள் முறையான தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்று சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட பின்னரே தற்காலிக வியாபார அனுமதி வழங்கப்படும்.
03. ஆலயச் சூழலில் வளர்ப்பு நாய்கள், மாடுகள் மற்றும் கட்டாக்காலி விலங்குகள் பொது வழிகளில் கட்டி வைக்கப்படுதல் அல்லது அலைந்து திரியவிடுதல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
04. குறித்த காலப்பகுதியில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

(C-1249)

தவிசாளர்,
வேலணை பிரதேச சபை.

தொடர்புகளுக்கு :
021 221 0180

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற தயார்!- ஐ.எம்.எப்

(கொழும்பு)

**இலங்கையில் ஆட்சியைப் பிடித்துள்ள புதிய அரசாங் கத்துடன் இணைந்து பணியாற்றுவதற்குத் தயாராக வுள்ளதாகச் சர்வதேச நாணய நிதியம் அறிவித் துள்ளது.**

சர்வதேச நாணய நிதியத் தின் பேச்சாளர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த விட யம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள் வதற்கு சர்வதேச நாணய நிதி யம் கடன் உதவியை வழங்கி வருகின்றது.

இந்தநிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதோடு, புதிய அரசாங்கத்துடன் பணி யாற்றத் தயாராகவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மூன்றாவது மதிப்பாய்வு தொடர்பில் விரை வில் கலந்துரையாடல்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் சர்வ தேச நாணய நிதியத்தின் பேச்சாளர் தெரிவித்துள் ளார். (நி)

## நேபாளத்திற்கு சென்ற கோட்டா



(காத்மண்டு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேபா ளத்திற்கு சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் மூலம் நேற்று முன்தினம் நேபாளத்தின் காத்மண்டுவில் உள்ள திரிபுவன் சர்வதேச விமான நிலையத்தில் அவர் தரையிறங்கி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன் போது கோட்டாபய பல்வேறு பௌத்த தலங்க ளுக்குச் செல்ல திட்டமிட்டுள் ளதாகவும் பரத்பூருக்குச் செல்ல திட்டமிட்டுள்ளதாகவும் தூத ரகத்தின் வட்டாரங்கள் குறிப் பிட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த பயணமானது, கோட்டாபயவின் தனிப்பட்ட பயணம் என கருதப் படுவதுடன் இலங்கையில் பல்வேறு துறைகளில் முதலீடு செய்துள்ள சவுத்ரி குழுமத்து டனும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதன் படி சவுத்ரி குழுமம் விடுத்த அழைப்பின் பேரி லேயே நேபாளத்துக்கு அவர் சென்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

## 'மொட்டு' என்னை ஏமாற்றி விட்டது

### கவலை வெளியிட்டார் ரணில்



(கொழும்பு)

நடைபெற்று முடிந்த ஜனா திபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் அநுர குமார திஸாநாயக்கவுக்கே வாக்களித்துள்ளதாக முன் னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள் ளார்.

அதேவேளை பொதுஜன பெரமுனவில் தமக்கு வாக்க ளித்தவர்களின் எண் ணிக்கை தாம் நினைத்த அளவுக்கு இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு மல் வீதியி லுள்ள அரசியல் காரியால யத்தில் கட்சி உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களுடன் இடம்பெற்ற கலந்துரையா டலின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள் மற்றும் சபை உறுப்பினர்கள் தமக்கு ஆதரவளிக்க வந்த போது மக்கள் அவர்களுடன் வர வில்லை எனத் தோன்று வதாக தெரிவித்த முன் னாள் ஜனாதிபதி, பொது ஜன பெரமுனவிலுள்ள பெரும்பான்மையான மக் கள் அநுரகுமார திஸாநா யக்கவுக்கே வாக்களித்துள் ளதாகவும் குறிப்பிட்டார்.

அடுத்ததாக பொதுத் தேர்தலுக்கு தயாராக வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## ஹரினியை சந்தித்த இந்திய உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

தேசிய மக்கள் சக் தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரி யவை, இலங்கைக் கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா சந்தித்துக் கலந்து ரையாடியுள்ளார்.



இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தமது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத் தில் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க உள் ளிட்ட தரப்பினர் பெற்றுக் கொண்ட வெற்றிக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித் துள்ளதுடன் இலங்கை மற்றும் இந்திய இரு தரப்பு முன் னெடுப்புகள் தொடர்பாகவும் இலங்கைக் கான இந்திய உயர் ஸ்தானிகர் தெளிவுபடுத்தியுள் ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் கலாநிதி ஹரினி அமரசூரியவுக்கு பிரதமர் பதவி வழங்கப்படும் என எதிர்பார் க்கப்பட்ட நிலையில் இலங் கைக்கான இந்திய உயர்ஸ்தா னிகரின் இந்தச் சந்திப்பு பேசு பொருளாக அமைந்துள்ளது. (நி)

## பொதுத்தேர்தலில் ரணில் போட்டியிடமாட்டார்

### வெளியான அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுத் தேர்தலில் போட்டி யிடமாட்டார் என தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரி வித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரி விக்கையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

மேலும், தேசியப் பட்டி யலின் ஊடாகவும் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பாராளுமன்றத்திற்கு வர மாட்டார் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள் ளார். இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த ஒரே ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் வஜிர அபேவர்த் தனவுக்கு வழங்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## வெற்றிக்கு வாழ்த்துக்கள்



## தமிழில் பதிவிட்ட பிரான்ஸ் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கையில் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர் தலில் வெற்றி பெற்று நாட் டின் புதிய ஜனா திபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அநுர குமார திஸாநாயக்க விற்கு வாழ்த்துத் தெரிவித்து பிரான்ஸ் ஜனாதிபதி இமா னுவேல் மக்ரோன் தனது முகநூலில் தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் பதி வொன்றை வெளியிட்டுள் ளார்.

குறித்த பதிவில், இல ங்கை மக்கள் அன்பு நண்பர்களே, உங்கள் ஜனா திபதி தேர்தலின் முன்னு தாரணமாக நடப்பது உங் கள் நாட்டின் ஜனநாயகத் தின் உயிர்த் தன்மையின் சக்திவாய்ந்த அறிகுறியா கும். வெற்றிக்கு வாழ்த் துக்கள் அநுர திசாநாயக்க!

இலங்கையுடன் இணை ந்து செயற்படுவதற்கு பிரா ன்ஸ் தயாராக உள்ளது. நம்பிக்கையும், ஒத்துழைப் பும் நம் கூட்டு முயற்சிக ளுக்கு அடிக்கல்லாக அமை யட்டும் எனவும் தெரிவித் தார்.

## புலமைப்பரிசில் பரீட்சை விவகாரம் நியாயமான தீர்வு வழங்கப்படும்

### கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிவு விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத் தின் ஊடாக மேலதிக விசா ரணைகள் நடத்தப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள் ளது.

குறித்த விசாரணைகளின் உண்மைகளைக் கருத்திற் கொண்டு மீண்டும் புலமைப் பரிசில் பரீட்சை நடத்துவதா இல்லையா? என்பது தொடர்பில் விரைவில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித் தார்.


அதுமட்டுமல்லாது விசா ரணைகளின் பின்னர் நியாய மான தீர்வு வழங்கப்படும் என வும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை புலமைப் பரிசில் பரீட்சையில் 3 வினாக் கள் கசிந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் திணைக்களப் பணிப் பாளர் எதிர்வரும் ஒக்டோபர் 7 ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்கப்பட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# சீன ஓபனில் இருந்து விலகினார் எம்மா ரடுகானு



பீஜிங்கில் நடைபெறும் சீன ஓபனில் இருந்து எம்மா ரடுகானு காலில் ஏற்பட்ட காயம் காரணமாக விலகியுள்ளார்.

21 வயதான பிரிட்டன் வீராங்கனை கடந்த சனிக்கிழமையன்று சியோலில் நடந்த கொரியா ஓபன் காலிறுதிப் போட்டியில் காயம் காரணமாக ஓய்வு பெற வேண்டியிருந்தது.

இது தொடர்பில் எனது காலில் சில தசை நார்களில் சுளுக்கு ஏற்பட்டது, துரதிஷ்ட வசமாக குணமடைய இன்னும் சிறிது நேரம் தேவை என்றும் என்னால் பீஜிங்கில் விளையாட முடியாது, விரைவில் குணமடைந்து மீண்டும் போட்டியிடுவேன் என நம்புகிறேன் என்று அவர் குறிப்பிட்டார். (நி)

# விஷ்வவிற்கு பதிலாக நிஷான் பீரிஸ்



வேகப்பந்து வீச்சாளர் விஷ்வ பெர்னாண்டோ காயம் அடைந்துள்ளதால், அவருக்கு பதிலாக சுழற்பந்து வீச்சாளர் நிஷான் பீரிஸ் இலங்கை டெஸ்ட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நியூசிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை 26 ஆம் திகதி காலி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3230

### விதுர்சிகா




### திலக்ஷன்




### கிருசிகா




### மாலினி




### சந்தியா




### தனு




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய-சீனப் போட்டியில் சிக்க விரும்பவில்லை

## உறுதிபடத் தெரிவித்தார் ஜனாதிபதி அநுர

**(கொழும்பு) இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான புவிசார் அரசியல் மோதலில் சிக்குப்படுவதற்கு இலங்கை விரும்பவில்லை என புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

இதன் மூலம் வலுவான சுயாதீன வெளிவிவகாரக் கொள்கை என்ற அணுகு முறைக்கான விருப்பத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

சர்வதேச சஞ்சிகையொன்றிற்கு வழங்கியுள்ள பேட்டியில் புவிசார் அரசியல் மோதல்களில் இருந்து விலகியிருப்பதற்கான தனது அரசாங்கத்தின் விருப்பத்தினை அநுரகுமார திஸாநாயக்க வெளியிட்டுள்ளார்.

அவரது தலைமைத்துவத்தின் கீழ் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இலங்கையின் இரண்டு நெருங்கிய அயல் நாடுகளான சீனா இந்தியாவுடன் சம நிலையான உறவுகளை பேண முயலும் என குறிப்பிட்டுள்ள அவர் குறிப்பிட்ட ஒரு நாட்டுடன் தன்னை இணைத்துக் கொள்ள முயலாது என தெரிவித்துள்ளார்.

புவிசார் அரசியல் மோதலில் நாங்கள் ஒரு பகுதியாக மாறமாட்டோம், எந்த தரப்புடனும் இணைந்து கொள்ள மாட்டோம் என தெரிவித்துள்ள இலங்கையின் புதிய ஜனாதிபதி சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் துண்டாடப்படுவதற்கு நாங்கள் விரும்பவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு நாடுகளும் 'பெறுமதி மிக்க நண்பர்கள், எங்கள் அரசாங்கத்தின் கீழ் நாங்கள் அவர்களின் நெருங்கிய சகாக்களாக மாறுவதை விரும்புகின்றோம்.


ஐரோப்பிய மத்திய கிழக்கு ஆபிரிக்காவுடனும் சிறந்த உறவைப் பேண விரும்புகின்றோம்.

அதிகரிக்கும் பிராந்திய பதற்றங்களிற்கு இடையில் இலங்கையின் இறைமையைப் பாதுகாப்பதற்கு இந்த நடுநிலை வெளிவிவகார கொள்கை அவசியம் என தெரிவித்துள்ள இலங்கையின் புதிய ஜனாதிபதி பரஸ்பரம் சாதகமான இராஜதந்திர உறவுகளை பேணுவதற்கு முயற்சி செய்வோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (நி)

---

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 - 01 - 1957



மறைவு 23 - 09 - 2024

## மார்க்கண்டு ஜோதி மார்க்கண்டு (சோதி)

உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு ஜோதிமார்க்கண்டு அவர்கள் (23.09.2024) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-நீலாம்பாள் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விஜயசிங்கம்-நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், விஜயகுமாரியின் அன்புக் கணவரும், திவ்ஜன் (அஞ்சல் அதிபர்), விந்துஜன், வாமினி, ஷர்ஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான மீனலோஜினி, குமாரமார்க்கண்டன், பாலமார்க்கண்டன், சாந்தினி, பவானி மற்றும் சறோஜினி, பத்மினி (கனடா), இராஜமார்க்கண்டன், இரஞ்சினி (இத்தாலி), விஜயமார்க்கண்டன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாபரன் (தயா அச்சகம்), விஜயராணி(பிரான்ஸ்), விஜயதேவி, தயானந்தன் (கலாசோடா), விஜயகௌரி, விஜயகலா (உரிமையாளர் கோறல் ரேஸ்ரி இன்டஸ்ரிஸ்), தயாபாலன் (ஆசிரியர்-யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.09.2024 இன்று புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உடுவில் மேற்கு,
உடுவில்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 918 0828

(சி-1246)

---

# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின்
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞான
(SFT) பாடத்தை கற்பித்த ஆசிரியர்

**அமரர்.**
**தயாசீலன் வைஷ்ணவன்**



அவர்களின் மரணச் செய்தியானது எம் பாடசாலைச் சமூகத்தையும் கல்விச் சமூகத்தையும் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

தோற்றம் 26.08.1995
மறைவு 17.09.2024

(373)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/வேம்பிடி மகளிர் உயர்தர பாடசாலை.**

---

# இராசிபலன்

25.09.2024
புரட்டாதி 09, புதன்கிழமை
அட்டமி பிற்பகல் 5.51 மணிவரை

திருவாதிரை பின்னிரவு 4.11 மணிவரை
சுபநேரம் 4.32 -6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை

அட்டமி, நவமி
சந்திராஷ்டமம்: விசாகம்

**வளவன்**




சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் சற்று கூடும்.




தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.




சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.




மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வியாபார விருத்தியுண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், செயற்பாட்டில் தீவிரம் காட்டுவீர்கள்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




எடுத்த காரியங்களை முடிப்பதில் கொஞ்சம் சிரமங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.




ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.




தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசனை சுகமுண்டு.




நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.




புதிய நபர்களின் சந்திப்பால் பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**வாய் கொடுத்த வாக்குறுதியை இதயம் விரைவில் மறந்து விடுகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தலை நடத்தி அதிகாரங்களை பகிர்வதே முக்கியம்

## மகிந்த தேசப்பிரிய வலியுறுத்து

(கொழும்பு)

**பாராளுமன்றத் தேர்தலை விடவும் மாகாண சபைத் தேர்தலை நடத்தி மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதே முக்கியத்துவமானது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய வலியுறுத்தியுள்ளார்.**



இராஜகிரியவில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு வலியுறுத்தியிருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் உரைக்கமைய பாராளுமன்றம் ஓரிரு தினங்களுக்குள் கலைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்ததன் பின்னர் 52 தொடக்கம் 66 நாட்களுக்குள் பொதுத் தேர்தல் நடத்தப்படும். பாராளுமன்றத்தை கலைப்பதாக அறிவிக்கும்.

வர்த்தமானியில் வேட்பு மனுத் தாக்கலுக்கான தினத்தையும் தேர்தலுக்கான தினத்தையும் குறிப்பிட வேண்டியதில்லை.

அதாவது இவ்வாரம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் டிசம்பர் மாதத்தின் முதல் வாரத்துக்குள் நிச்சயம் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

தற்போதுள்ள பாராளுமன்றத்திற்கும் மக்கள் ஆணை கிடையாது.

எனவே இந்த பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும். அதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் நடத்தி மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்த வேண்டும்.

தற்போது மாகாண சபைகளும் காணாமலாக்கப்பட்டிருக்கின்றன. அவை தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும்.

ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக நாம் முன்னிற்போம்.

13ஆவது திருத்தமா அல்லது 13 பிளஸா என்பது இரண்டாம் பட்சமாகும்.

ஆனால் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம்" என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய மேலும் குறிப்பிட்டார். (நி)

# கட்டுநாயக்கவில் பாதுகாப்பு தீவிரம் சிக்கப்போகும் பெரும் புள்ளிகள்

(கொழும்பு)

நாட்டில் பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தப்பிச் செல்லாதவாறு கட்டுநாயக்க விமான நிலையத்தில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளது.

அதற்கமைய சில அரசியல்வாதிகள் விமான நிலையம் சென்ற போதும், அவர்கள் குடிவரவு அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் உத்தரவுக்கு அமைய சுமார் 30 பேர் விபரங்கள் விமான நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஏற்கனவே கடந்த ஆட்சியின் போது முக்கிய அமைச்சு பதவிகளை வகித்தவர்களின் மனைவிகள், பிள்ளைகள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர், ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (நி)

# செந்தில் தொண்டமான் உட்பட ஆறு மாகாண ஆளுநர்கள் இராஜினாமா



(கொழும்பு)

கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் உட்பட்ட ஆறு மாகாண ஆளுநர்களின் இராஜினாமா விபரங்களை ஜனாதிபதி செயலகம் வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கீழ் புதிய அரசாங்கம் அமைக்கப்படவுள்ள நிலையில், அமைச்சர்கள், ஆளுநர்கள் என பலர் தங்களது பதவி இராஜினாமாக்களை அறிவித்து வருகின்றனர்.

அதற்கமைய வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை: பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர்: ஸ்ரீவரதன் பெண் பரமேஸ்வரி
சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர்: சொந்தக்காரர் நல்லதம்பி வீரசிங்கம்
முகவரி: ஆதன இல: 40/1, சித்தன்கேணி வீதி, வட்டாரம்-03

வட்டாரம் 03, சித்தன்கேணி வீதி ஆதன இல: 40/1 இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு கோவில்பற்று பண்டத்தரிப்பு இறை "வண்டாவத்தை அல்லது ஆலங்குழி" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 02 குழி 9.54 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு C.தில்லையம்பலம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1951.08.12ஆம் திகதிய 29ஆம் இலக்க சீதன உறுதிப்பிரகாரம் கந்தசாமி பெண் அன்னலட்சுமிக்கு வந்தடைந்து பிரசித்த நொத்தாரிசு V.மயில்வாகனம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1983.03.09ஆம் திகதிய 3588ஆம் இலக்க நன்கொடை உறுதிப்படி நல்லதம்பி வீரசிங்கம் பெண் காந்திமதிக்கு வந்தடைந்து பிரசித்த நொத்தாரிசு இ.இராசா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1987.06.10ஆம் திகதிய 5784ஆம் இலக்க சீதன உறுதிப்பிரகாரம் சின்னப்பு சிவலிங்கம் பெண் விஜயராணிக்கு வந்தடைந்து பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2022.11.27ஆம் திகதிய 1295ஆம் இலக்க அறுதி உறுதிப்பிரகாரம் கணபதிப்பிள்ளை ஸ்ரீவரதன் பெண் பரமேஸ்வரிக்கு வந்தடைந்தது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் P.புஸ்பராஜா அவர்களால் வரையப்பட்ட 9048ஆம் இலக்க 2022.02.20ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 02 குழி 9.54 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

வடக்கு: பாதையும் கதிர்காமநாதன் விஜயமாலாவின் ஆதனமும்
கிழக்கு: பொன்னுத்துரை சிவகுமாரின் ஆதனமும் பாலசிங்கம் நகுலேஸ்வரனின் ஆதனமும்
தெற்கு: வேலாயுதம் கைம்பெண் சரஸ்வதியின் ஆதனம்
மேற்கு: சோதிமுத்து மார்க்கண்டுவின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை கணபதிப்பிள்ளை ஸ்ரீவரதன் பெண் பரமேஸ்வரி என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதனப் பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(2110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கான தீர்வு உங்களால் எட்டப்பட வேண்டும்



## ஜனாதிபதிக்கான வாழ்த்தில் சுரேஸ் பிரேமச்சந்திரன்

(யாழ்ப்பாணம்)

புறையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சினைக்கு புதிய ஜனாதிபதி நிரந்தரத் தீர்வினைக் கண்டு நாட்டை சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் முன்கொண்டு செல்ல முயற்சிக்க வேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இடதுசாரி தலைவரான அநுரவின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது இலங்கையில் முதன் முறையாக மார்க்சிய லெனினிய சிந்தனையைக் கொண்ட இடதுசாரி கட்சியொன்றின் தலைவர் மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். இந்த நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று ஜனாதிபதியாகிய அநுரகுமார திஸாநாயக்கவிற்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பாகவும் தமிழ் மக்கள் சார்பாகவும் மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஒருபுறம் பொருளாதார ரீதியில் வங்குரோத்து அடைந்துள்ள நாடு இலஞ்சம், ஊழல் மறுபுறம் முப்பது வருடங்களாக நடைபெற்ற பாரிய யுத்தம், இதனால் ஏற்பட்ட இழப்புகளும் பொருளாதார அழிவுகளும் இவை அனைத்தையும் தீர்த்து வைக்க வேண்டிய ஒரு பொறுப்பிலும் நீங்கள் இருக்கின்றீர்கள்.

நீண்டகாலமாக இழுபறிப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான கௌரவமான தீர்வு ஒன்று எட்டப்படவேண்டும். இவை இல்லாமல் பொருளாதார முன்னேற்றங்களோ அபிவிருத்தியோ ஏற்படுவது மிகக்கடினமான ஒரு செயற்பாடாகும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காண்பதற்கு நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு நாங்கள் துணையாக இருப்போம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புவதோடு நீண்டகாலமாக இழுபறிப்பட்டுக்கொண்டிருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நீங்கள்தான் தகுதிவாய்ந்தவர் என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

உங்கள் முயற்சிகளும் சிந்தனைகளும் வெற்றியடைய மீண்டும் ஒருமுறை உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (நி)

# போக்கட்டி அ.த.க பாடசாலை வீதி புனரமைப்பு ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் கொடிகாமம் போக்கட்டி அ.த.க பாடசாலையின் முன்பக்க வீதியின் ஒரு பகுதியை புனரமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு அண்மையில் இடம்பெற்றிருந்தது.

மேற்படி நிகழ்வில் சாவகச்சேரிப் பிரதேசசபைச் செயலாளர் கலந்து கொண்டு வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்திருந்தார்.

போக்கட்டி அ.த.க பாடசாலை அதிபர் தி.அபராஜிதனின் கோரிக்கைக்கு அமைவாக மேற்படி பாடசாலை முன் வீதிக்கு பிரதேசசபையால் ஒரு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-30)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் ஊடாக அண்மையில் கல்வியங்காடு முத்தமிழ் முன்பள்ளிச் சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்தியன் ரோட்டரிக் கழக உறுப்பினர்களுடைய நிதிப் பங்களிப்பில் மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்: சுபேசன்)

# முட்டை விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

சந்தையில் முட்டை ஒன்றின் விலை 10 ரூபாயினால் குறைவடைந்துள்ளதாக முட்டை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். உற்பத்தி அதிகரிப்பு காரணமாகவே முட்டையின் விலை குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கமைய தற்பொழுது 30 ரூபாய் முதல் 35 ரூபாய் வரையில் முட்டைகள் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


# சா/த பரீட்சை பெறுபேறுகள் இம்மாத இறுதிக்குள்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபெறுகளை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகளுக்கான ஆவணங்களைத் தயாரிக்கும் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர குறிப்பிட்டார். (நி)


# அநுர அறிவித்த அதிரடிச் சட்டங்கள்



- பூச்சிய அரசியல் செல்வாக்கு இல்லாமல் காவற்துறை, சட்டத்துறை மற்றும் நீதிமன்றங்களைச் சுதந்திரமானதாக மாற்றும் ஒரு சட்ட ஸ்தாபனம்.
- மோசடி வழக்குகளை விசாரிக்க 3 பெஞ்ச் சிறப்பு நீதிமன்றம்.
- ஜனாதிபதியின் பட்ஜட் 50% குறைப்பு.
- அரசாங்க அதிகாரிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிக எரிபொருள் பாவனை வாகனங்கள் இல்லை.
- எம்.பி.க்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சிக்கு மாறுவதைத் தடுக்க புதிய சட்டங்கள்
- 25 அமைச்சகங்கள் மட்டுமே நிறுவப்படும்.
- 25 அமைச்சுக்களின் கீழ்வரும் அனைத்து துறைகளுக்கும் அணிகள் ஒதுக்கப்படும்.
- புதிய சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் தொடங்குவதற்கான மேம்பாட்டு வங்கி அமைக்கப்படும்.
- வெளிநாட்டு சுற்றுப் பயணங்களில் குடும்பங்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது.
- முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் அல்லது வாகனங்கள், வீடுகள், பாதுகாப்பு போன்றவை இல்லை.
- ஒரு அமைச்சர் அல்லது எம்.பி.க்கு ஒரு வாகனம்.
- உணவுப் பொருட்கள், சுகாதாரத் துறை சேவைகள் மற்றும் கல்விப் புத்தகங்களுக்கு வட் வரி விலக்கு அளிக்கப்படும்.
- 36% முதல் 24% வரை வரி செலுத்துவது கட்டாயமாக்கப்படும்.
- அரசாங்கத் துறைகளின் தலைவர்கள், தூதர்கள் போன்றவற்றின் தகுதியின் அடிப்படையில் அனைத்து நியமனங்கள் இடம்பெறும்.
- எங்களின் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் சேவைகளுக்கான புதிய சந்தைகள் மூலம் டொலர் வரவை மேம்படுத்தும் தூதுவர்கள் நியமிக்கப்படுவார்கள்.
- போதுமான நிதியுதவி மூலம் குடிமக்களுக்கு அடிப்படையான உணவு, சுகாதாரம் மற்றும் கல்வி.
- மகசூலை அதிகரிக்க மீன்பிடித் தொழிலுக்காக புதிய தொழில்நுட்பம்
- எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மீட்டமைத்தல்.
- R and D வழங்கும் வெவ்வேறு மண் இடங்களின் படி அல்லது சந்தை தேவைகளுக்கு ஏற்ப விவசாயிகள் சாகுபடி செய்ய வேண்டும்.
- குறைந்தபட்ச செலவில் குளிர் அறைகள், உரங்கள் மற்றும் பிற பயன்பாடுகள் போன்ற பாதுகாப்பு முறைகள்
- பொருளாதாரத்தை எளிதாக்க கல்விக் கொள்கைகளில் மாற்றங்கள்
- தகவல் தொழில்நுட்ப சந்தையை கைப்பற்ற திட்டங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் ஜனாதிபதியை சந்தித்தார் பிரதமர் மோடி



(கீவ்)

பிரதமர் மோடி 3 நாள் அரசு முறை பயணமாக அமெரிக்கா சென்றார். இந்த பயணத்தின்போது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனைச் சந்தித்த பிரதமர் மோடி, குவாட் உச்சி மாநாட்டிலும் கலந்து கொண்டார்.

இதனைத் தொடர்ந்து பயணத்தின் கடைசி நாளான நேற்று முன் தினம் பிரதமர் மோடி ஐ.நா.சபையில் உரை யாற்றினார்.

இந்த நிகழ்ச்சியின்போது உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ் கியை பிரதமர் மோடி சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது உக்ரைன் - ரஷ்யா போரை முடிவுக்கு கொண்டுவரத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க இந்தியா தயாராக இருப்பதாக ஜெலன்ஸ்கியிடம் மோடி உறுதியளித்தார். (நி)

# மனித கேடயமாகாதீர்கள்!

## லெபனான் மக்களை எச்சரித்த நெதன்யாகு



(இஸ்ரேல்)

லெபனான் மீது பயங்கரமான வகையில் இஸ்ரேல் வான்தாக்குதல் நடத்தியது. இதில் சுமார் 500 லெபனான் மக்கள் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் ஹிஸ்புல்லா அமைப்பினரை பாதுகாக்கும் வகையில் கேடயமாக மாறாதீர்கள் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு லெபனான் மக்களிற்கு வீடியோ மூலம் தகவல் தெரிவித்துள்ளார்.

லெபனான் மக்களுக்கான நெதன்யாகு வெளியிட்டுள்ள வீடியோ செய்தியில் "இஸ்ரேல் போர் லெபனான் மக்களுடன் இல்லை. அது ஹிஸ்புல்லா உடன்.

நீண்ட காலமாக மக்களை கேடயமாக ஹிஸ்புல்லா பயன்படுத்தி வருகிறது. உங்கள் வீடுகளில் ரொக்கெட்டுகளைப் பதுக்கி வைக்கிறது.

அவைகள் எங்கள் நாட்டின் மக்களை குறி வைக்கிறது. ஹிஸ்புல்லா தாக்குதலுக்கு எதிராக எங்கள் மக்களை பாதுகாக்க அந்த ஆயுதங்களை நாங்கள் வெளியே எடுக்க வேண்டும்" எனத் தெரிவித்தார்.

இஸ்ரேலின் வடக்குப் பகுதியில் இருந்து (லெபனான் எல்லை) வெளியேறிய இஸ்ரேல் மக்களை மீண்டும் அதே இடத்தில் பாதுகாப்பாக அமர்த்துவது எங்களுடைய நோக்கம் எனப் போர் நோக்கத்தை இஸ்ரேல் விரிவுப்படுத்தியது.

மேலும், போரின் மையப் பகுதிய வடக்கு நோக்கி நகர்கிறது என இஸ்ரேல் தெரிவித்திருந்தது.

சில தினங்களுக்கு முன் போர் கட்டம் மாற்றப்படுகிறது என லெபனான் எச்சரித்திருந்தது. லெபனான் தாக்குதலை எதிர்கொள்ள தயார் என இஸ்ரேல் பதில் அளித்திருந்தது.

இந்த நிலையில்தான் லெபனான் மீது இஸ்ரேல் பயங்கரத் தாக்குதலை நடத்தியதில் சுமார் 500 பேர் உயிரிழந்துள்ளனர். (நி)

# சிறுவர்களை கோபக்காரர்களாக மாற்றும் கைக்கணனிகள்: ஆய்வில் தகவல்

(ஒட்டாவா)

சிறுவர்களிடையே மடிக்கணனிகள், கணனிகள், கைக்கணனிகள், தொலைபேசிகளின் பாவனை அதிகரித்து வருகின்றன.

அந்த வகையில், கைக்கணனிகளை (Tablet) அதிகம் பயன்படுத்தும் சிறுவர்கள் அதிக கோபக்காரர்களாக இருப்பதாக கனடாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.


சொந்தமாகக் கை கணனிகள் வைத்திருக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை கடந்த 2013 ஆம் ஆண்டில் வெறும் 7 சதவீதமாக இருந்தது. அதேவேளை 2020 இல் 44 சதவீதமாக உயர்ந்துள்ளது.

அமெரிக்காவை பொறுத்தவரையில் 93 சதவீத பெற்றோர் தங்களில் 4 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இவ்வகை சாதனங்கள் பயன்படுத்துவதை ஊக்குவிக்கின்றனர்.

பொழுதுபோக்கு அம்சங்கள் இந்த சாதனங்களுக்குள் இருப்பதால் சிறுவர்களின் விருப்பப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளன என்றாலும் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாத நிலையில் சிறுவர்கள் உள்ளனர்.

இரண்டு வயதில் தான் கோப உணர்வை கட்டுப்படுத்த குழந்தைகள் கற்றுக்கொள்கின்றனர். ஆனால், அந்த வயதிலிருந்தே குழந்தைகள் கைக்கணனிகளுக்குள் மூழ்கிவிடுகின்றனர்.

இதனால் கோபத்தை கட்டுப்படுத்த முடியாமல் கூச்சலிடும் சுபாவம் கொண்டவர்களாக மாறிவிடுகின்றனர்.



இதுதொடர்பில், மூன்றரை வயதான சிறுவர்கள் கைக்கணனிகளை பயன்படுத்தும் ஒவ்வொரு 73 நிமிடத்துக்கும் அவர்களின் கூச்சலிடும் தன்மை அதிகரிப்பது தெரியவந்தது.

அதேபோல் ஐந்தரை வயதான சிறுவர்களின் கைக்கணனி பயன்பாட்டில் ஒவ்வொரு 17 நிமிடத்திற்கும் அவர்களின் கோபம் அதிகரிப்பது தெரியவந்துள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (நி)

# லெப
# மே

> 500 பேர் உ

> மூடப்பட்ட பா

> படைகளை
அமெரிக்கா



இஸ்ரேல் மற்றும் லெபனான் நாடுகளுக்கு இடையிலான மோதல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பேஜர், வாக்கிடாக்கிகள் வெடிப்பு சம்பவங்களைத் தொடர்ந்து லெபனானில் இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது.

தெ
ஹிஸ்
இடங்
தாக்கு
கிறது
னுவ
அத
நடத்
500

# உயிரினங்கள்
# மாறும் ெ

உலகப் பெருங்கடல்கள், கடல்வாழ் உயிரினங்களைச் சரியாகப் பராமரிக்கவோ அல்லது காலநிலையை நிலைப்படுத்தவோ முடியாத அளவுக்கு அமிலத்தன்மை கொண்டதாக மாற்றமடைந்து வருவதாக புதிய அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

போட்ஸ்டாம் இன்ஸ்டிடியூட் ஃபார் காலநிலை தாக்க ஆராய்ச்சியின் (PIK) அறிக்கை, உயிர்களை நிலைநிறுத்தும் கிரகத்

தின்
வதற்
காரண
இ
மனி
வாக
உயி
பான
பட்டு
அ
மயய
வரம்
இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனான்- இஸ்ரேல்

# மாதல் தீவிரம்!

ர் உயிரிழப்பு

பாடசாலைகள்

ள அனுப்பும்
கா

(பெய்ரூட்)

**லெபனானில் ஹிஸ்புல்லாவை குறி வைத்து இஸ்ரேல் நடத்திய தீவிரமான மற்றும் பரந்த அளவிலான வான்வழித் தாக்குதல்களில் சுமார் 500 பேர் உயிரிழந்துள்ளனர்.**





தெற்கு லெபானானில் ஹிஸ்புல்லா ஆயுதக் குவியல் இடங்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது என இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

அதன்படி, இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் சுமார் 500 பேர் உயிரிழந்துள்ளனர் என லெபனான் அரசு தெரிவித்துள்ளது. இதனால் லெபனான் மற்றும் இஸ் ரேல் இடையிலான சண்டை தீவிரம் அடைந்து வருகிறது. தெற்கு லெபனானில் இருந்து மக்களை வெளியேறும்படி இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதையடுத்து லெபனானில் 2 நாட்களுக்கு பள்ளிகள் மூடப்படுகிறது என அந்நாட்டு அரசு அறிவித்தது. கிழக்கு, தெற்கு மற்றும் பெய்ரூட் நகரின் தென் பகுதியில் செயற்பட்டு வரும் பள்ளிகள் மூடப்படுகின்றன.

இந்நிலையில், மத்திய கிழக்குப் பகுதிக்கு மேலும் படைகளை அனுப்ப உள்ளோம் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, பென்டகன் அதிகாரி பாட் ரைடர் கூறு கையில், மத்திய கிழக்கில் அதிகரித்த பதற்றத்தாலும், மிகுந்த எச்சரிக்கை காரணமாகவும், அப்பகுதியில் ஏற்கனவே இருக்கும் நமது படைகளை அதிகரிக்க சிறிய எண்ணிக்கையிலான கூடுதல் அமெரிக்க இராணுவ வீரர்களை அனுப்புகிறோம்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அது தொடர்பான விவரங்களை வெளியிடவில்லை எனத் தெரிவித்தார். (நி)

## கள் வாழ முடியாத அளவு பெருங்கடல்கள்

தின் திறனை ஒழுங்குபடுத்துவதற்கு முக்கியமான ஒன்பது காரணிகளை விவரிக்கிறது.

இவற்றில் ஆறு காரணிகள், மனித நடவடிக்கைகளின் விளைவாக அண்மைய ஆண்டுகளில் உயிர் வாழ்வதற்கான பாதுகாப்பான வரம்பு ஏற்கனவே மீறப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டுகிறது.

அதேநேரம், கடல் அமில மயமாக்கலுக்கான முக்கியமான வரம்பு விரைவில் மீறப்படும், இது ஏழாவது காரணியாக அமையலாம் என்று நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கை தெரிவித்துள்ளது.

எண்ணெய், நிலக்கரி மற்றும் எரிவாயு போன்ற புதைபடிவ எரிபொருட்களை எரிப்பதன் மூலம் உருவாக்கப்பட்ட கார்பன்டை ஆக்சைடு ($CO_2$) உமிழ்வுகள் அதிகரித்து வருவதன் விளைவாக, கடல் அமில மயமாக்கலின் நிலையான நிலை இப்போது அதிகமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஜப்பான் தீவுகளை தாக்கிய சுனாமி



(டோக்கியோ)

ஜப்பானில் இசு தீவுகளுக்கு அருகே நேற்று [illegible] நிலநடுக்கம் ஏற்பட்டது

நிலநடுக்கம் ஏற்பட்ட 40 நிமிடங்களுக்குப் பின்னர், தீவுகளை சிறிய அளவிலான சுனாமி அலைகள் தாக்கியதாக (50 செமீ) ஜப்பான் வானிலை ஆய்வு நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானின் கொசுஷிமா, மியாகேஜிமா மற்றும் இசு ஓஷிமா ஆகிய மூன்று தீவுகளிலும் சிறிய சுனாமிகள் கண்டறியப்பட்டுள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை சுனாமி அல்லது நிலநடுக்கம் காரணமாக இதுவரை உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் ஜப்பான் வானிலை ஆய்வு நிலையம் குறிப்பிட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராயரை சந்தித்த ஜனாதிபதி

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க பேராயர் கர்தினால் மல்கம் ரஞ் சித்தை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டுள்ளார்.

பொரளை பேராயரின் உத்தியோக பூர்வ இல்லத்திற்குச் சென்ற ஜனாதிபதி, பேராயரைச் சந்தித்து நலம் விசாரித் ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது.

இலங்கையின் பெரும்பான்மை யான மக்களின் விருப்பத்தினால் ஜனா திபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்கவிற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள் கின்றேன் என்றும் தேவையான விடயங்களை கொண்டு வரும் முக்கியமான பணியை இலங்கை மக்கள் அவரிடம் ஒப்படைத்துள்ள தாகவும் நான் கருதுகின்றேன் என்றும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் குறிப்பிட்டிருந் தார். (நி)

# ஜனாதிபதி அநுரவுக்கு சந்திரிகா வாழ்த்து

(கொழும்பு)

இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க வாழ்த்து தெரி வித்துள்ளார்.

இலங்கையர்கள் எதிர்பார்க்கும் புதிய சகாப்தத்தை உருவாக்க அவர்களுக்கு பலம் வழங்கப்ப டும் எனவும் அவர் தமது வாழ்த் துச் செய்தியில் கூறியுள் ளார். (நி)

# பொதுத்தேர்தலை நடத்த தயார் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

எந்த நேரத்திலும் பொதுத் தேர்தலை நடத்தத் தயார் என தேர்தல்கள் ஆணைக்குழு அறி வித்துள்ளது. இந்நிலையில், ஒரு பொதுத் தேர்தலுக்கான மதிப் பிடப்பட்ட தொகை சுமார் 11 பில்லியன் ரூபாயாக இருக்கும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர் தலுக்காக தயாரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல் பொதுத் தேர்தலுக்கு பயன்ப டுத்தப்படும் என அவர் தெரிவித்துள் ளார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 200 | 140-160 | 160 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 200 | 200 | 400 |
| தக்காளி | 200 | 180 | 180 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 220 | 150-250 | 200 |
| கோவா | 250 | 300 | 300 | 270 | 400 |
| கரட் | 250 | 280 | 300 | 250 | 300 |
| பூசணி | 80 | 60 | 80 | 60 | 100 |
| புடோல் | 60 | 150 | 120 | 100 | 300 |
| வாழைக்காய் | 150 | 220 | 200 | 200-250 | 320 |
| சின்ன வெங்காயம் | 320 | 300 | 250 | 150-300 | 350 |
| பெரிய வெங்காயம் | 350 | 220 | 300 | 280 | 250 |
| பாகற்காய் | 300 | 400 | 400 | 300-350 | 600 |
| வெண்டக்காய் | 80 | 100 | 100 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 180 | 200 | 150 | 240 |
| பயற்றங்காய் | 350 | 350 | 300 | 150-200 | 400 |
| லீக்ஸ் | 320 | 350 | 400 | 300 | 320 |
| பீற்றூட் | 100 | 120 | 180 | 80-140 | 200 |
| கறிமிளகாய் | 400 | 500 | 600 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 650 | 700 | 400-500 | 600 |
| போஞ்சி | 400 | 500 | 500 | 300 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 160 | 200 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 130 | 80 | 80 | 70 | 120 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 | 450-500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 140 | 130 | 80-140 | 100-140 |
| இராசவள்ளி | -- | 850 | 650 | 600 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 400 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 120 | 140 | 150 | 90 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 70 | 150 |

## இன்று ஒரு தகவல் 231



தென்கச்சி. கோ. சுவாமிநாதன்

# வாசனை விஞ்ஞானம்

மலரும் நினைவுகள் என்கின்ற வார்த்தையை இப்போது அடிக்கடி சொல்லிக் கொண்டு இருக்கின்றோம் அல்லவா அதைப்பற்றி இப்போது வேறு விதமாக ஒரு ஆராய்ச்சி செய்வோம்.

மலருக்கும் நினைவுக்கும் சம்பந்தம் உண்டா? இது தான் கேள்வி இதற்கு உண்டு என்று தான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஏன் என்றால் வாசனைகளுக்கும் பழைய நினைவுகளுக்கும் தொடர்பு இருக்கு என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

நல்லதோ கெட்டதோ ஒரு நிகழ்ச்சி ஒரு வாசனையோட சம்பந்தப் பட்டிருந்தால் அது சுலபமாக மறந்து போவதில்லை என்று அவர்கள் சொல்லுகின்றார்கள்.

இரண்டு நண்பர்கள் ஒரு தெரு வழியாக நடந்து போய்க்கொண்டு இருந்தார்களாம். யார் வீட்டிலேயோ மசால் வடை போடுகின்ற வாசனை அவர்களுக்கு எட்டியிருக்கிறது.

உடனே அவர்களுக்கு பழைய ஞாபகம் வந்திருக்கிறது. மலரும் நினைவுகள்! பள்ளிக் கூடத்திலே படித்துக் கொண்டு இருந்த போது வகுப்பிலே மசால் வடையை மறைத்து வைத்து சாப்பிட்டு அது ஆசிரியர் கண்ணிலே பட்டு திட்டு வாங்கினது ஞாபகத்திற்கு வந்தது.

ஒரு மாசால் வடை வாசனை அந்த நண்பர்களை 25 வருடத்திற்கு முன்பு அழைத்துக் கொண்டு போய்விட்டது. இது மாதிரியே ஒவ்வொரு வாசனைக்கும் ஞாபகத்தை வெளியே கொண்டு வருகின்ற ஆற்றல் இருக்கின்றதாம்.

ஜேர்மனியிலே ஒரு காலத்திலே மக்களுக்கு குளோரின் வாசனை என்றாலே ஒரு வெறுப்பு! அதனாலே அதை ஒரு வருட காலத்துக்கு வேண்டாம் என்று சொல்லி தள்ளியே வைத்திருந்தார்களாம். எதற்கும் உபயோகப்படுத்துவதில்லையாம்.

ஏன் தெரியுமா? குளோரின் வாசனை அடித்தாலே அவர்களுக்கு உலக யுத்தம் ஞாபகத்திற்கு வந்துவிடுமாம். என்ன காரணம் என்றால் யுத்த சமயத்திலே குண்டு விழுந்த இடங்களை சுத்தப்படுத்துவதற்கு குளோரின் உபயோகப்படுத்தி இருந்தார்களாம்.

அதனாலே அந்த வாசனை பழைய சோகத்தை ஞாபகப்படுத்தியி ருக்கிறது. அதுதான் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள்.

ஆண்களை விட பெண்களுக்குத்தான் வாசனைகளைத் துல்லியமாக அறிகின்ற சக்தி இருக்கிறது என்று ஆய்வாளர்கள் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

ஓரிரு சிறிய சோதனை கூட செய்து பார்த்திருக்கின்றார்கள். குழந்தை பிறந்து 6 மணி நேரத்திற்குப்பிறகு அந்தத் தாயினுடைய கண்ணை கட்டிவிட்டுகின்றார்கள்.

அதன்பின்பு சில குழந்தைகளை அந்தத் தாயிடம் கொண்டு போகு கின்றார்கள். குழந்தையினுடைய வாசனையை வைத்தே அது தன்னுடைய குழந்தை என்பதை அந்த அம்மா சொல்லிவிடுவாராம்.

அதே மாதிரி குழந்தைகளும் மிகவும் சமர்த்து. தாய்ப்பால் குடிக்கிற ஆறு வாரக் குழந்தைகள் வாசனை மூலமாகவே தாய் யார்? தாதிப் பெண் யார்? என்று கண்டுபிடித்துவிடுவார்களாம்.

ஒரு கெட்டிக்கார அம்மா எட்டு வயது வரைக்கும் தன் குழந்தையினு டைய ஆடைகளை வாசனை மூலமாகவே கண்டுபிடித்து விட முடியுமாம். இதற்கு காரணம் என்ன தெரியுமா? தாய்க்கும் குழந்தைக்கும் உயிரியல் - உடலியல் அடிப்படையிலே ஒரே விதமான வியர்வைச் சுரப்பி தான் தோலிலே இருக்குமாம். ஆனால் கணவனுக்கும் மனைவிக்கும் அப்படி இருக்கிறதில்லை!

அந்தக் காலத்திலே எல்லாம் மனித உடம்பிலே உள்ள வாசனையை வைத்தே அவருக்கு என்ன நோய் என்பதை கண்டுபிடித்தார்களாம்.

சுட்ட ரொட்டியின் வாசனை மூச்சுக் காற்றிலே தெரிந்தால் அது டைஃபாடு ஜுரம்! ஒருவருடைய மூச்சுக்காற்று பொருட்களை நொதிக்கச் செய்கின்ற அளவிற்கு இருந்தால் அவருக்கு கான்சர்!ஈரலிலே புண் இருந்தால் அந்த ஆளைச் சுற்றி பழத்திலே உட்காருகின்ற ஈக்கள் பறக்குமாம்.

ஆர்சனிக் விசம் குடித்தவன் மேலே பூண்டு வாசம் இருக்குமாம்! இப்படியெல்லாம் சொல்லுகின்றது வாசனை விஞ்ஞானம். அதெல்லாம் இருக்கட்டும்! வாசனை பழைய ஞாபகத்தை கொண்டு வரும் என்பதற்கு இன்னொரு உதாரணம்.

ஒரு அம்மா தன்னுடைய கணவரைப் பார்த்து சொன்னார் எங்கே யாவது மல்லிகைப்பூ வாசனை வீசினால் எனக்கு பழைய கால ஞாபகம் வந்து விடும். 30 வருடத்திற்கு முன்னாலே நமக்கு திருமணம் ஆன புதுசிலே உங்க கை நிறைய மல்லிகைப்பூ வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தீர்கள் என்றார். பரவாயில்லையே மறக்காம இருக்கிறியே! என்று சொல்லி ஆச்சரியப்பட்டார் அந்தக் கணவர். அதற்கு நீங்கள் தான் காரணம் என்றார அந்த அம்மா. அதற்கு பின்பு ஒரு தடவை கூட நீங்க பூவே வாங்கிக் கொடுக்கிறதில்லை. அதனாலே தான் அதை மறக்க முடியவில்லை என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாலங்களை புனரமைக்குமாறு முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை



(கண்டாவளை)

முல்லைத்தீவு பரந்தன் ஏ 35 வீதியில் உள்ள வட்டு வாகல் பாலம் மற்றும் புளியம் பொக்கனை 10 ஆம் கட்டை பகுதியிலுள்ள பாலம் ஆகிய இரு பாலங்களும் பல ஆண்டு களாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவத னால் விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த வீதியில் மிக நீண்ட காலமாக ஆபத்தான நிலையில் காணப்படும் வட்டு வாகல் பாலம் கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்னரான யுத்தம் மற்றும் 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தம் என் பவற் றால் கடுமையான சேதத்துக்கு உள்ளாகியதுடன் தற்போது சிறுசிறு திருத்த வேலைகள் செய்யப்பட்டு போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

குறித்த பாலத்தின் புன ரமைப்பு பணிகள் கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங் கிணைப்புக் குழு கூட்டங்கள் மற்றும் மாகாண சபை ஆகிய வற்றில் நடந்த கலந்துரை யாடல்களில் இந்த பாலத்தின் அவசியம் பற்றி கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதிலும் எந்தவிதமான நடவடிக்கை களும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் குறித்த பாலத்தின் பல இடங் களில் உடைவுகள் ஏற்பட்டு சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன.

கடந்த 2021 ஆம் ஆண்டில் புனரமைப்பு பணிகள் ஆரம் பிக்கப்பட்டு அதன் பணிகளும் இன்று வரை நிறைவடையா மல் காணப்படுகின்றன.

எனவே இரு பாலங் களையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பல ரும் கோரிக்கை விடுத்துள் ளனர். (நி-315)

# பாரிய இரும்புக் கம்பியால் மருமகனை தாக்கிய மாமனார்

## மதுவால் வந்த வினை



(தருமபுரம்)


கிளிநொச்சி பொலிஸ் பிரி வுக்குட்பட்ட பெரியகுளம் கட்டைக்காட்டுப் பகுதியில் மாமன், மருமகனுக்கு இடையில் மதுபோதையில் ஏற்பட்ட தகராறு காரண மாக பாரிய இரும்பினால் மாமன் தாக்கியதில் மரு மகன் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச் சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசா லைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் கல்மடு இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த பூபாலசிங்கம் ஜங் கரன் என்னும் 32 வயது டைய இளைஞனே படு காயம் அடைந்துள்ளார்.

மேலும் மாமனார் கைது செய்யப்பட்டுள்ள துடன் மேலதிக விசார ணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-316)

## திலீபனின் நினைவேந்தல்

# வவுனியாவில் அனுஷ்டிப்பு



(வவுனியா)

தியாக தீபம் திலீபனின் 37 ஆவது நினைவு தினம், நேற்று வவுனியாவில் உள்ள பொங்குதமிழ் தூபியில் அனுஷ் டிக்கப்பட்டது.

நினைவேந்தலின் ஆரம்ப நிகழ்வாக, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவு களின் சங்கத்தலைவி கா.ஜெய வனிதாவினால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அதனைத் தொடர்ந்து திலீபனின் உரு வப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், பொங்கு தமிழ் தூபியில் சுடரேற்றி அஞ் சலியும் செலுத்தப்பட்டிருந்தது.

இவ் நினைவேந்தல் நிகழ் வில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந் திரன் மற்றும் காணாமல் ஆக் கப்பட்டவர்களின் உறவுகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி)

# உடுப்பாற்றுக் கண்டலை

## தனிக்கமக்கார அமைப்பாக்குமாறு

# விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டா வளை கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள புலிங்கதேவன் முறிப்பு கமக் கார அமைப்புக்குட்பட்ட உடுப்பாற்றுக் கண்டல் விவ சாயிகள் தங்களை தனி யான கமக்கார அமைப்பாக பிரிப்பதற்கான கோரிக்கை களை முன்வைத்துள் ளனர்.

கிளிநொச்சி பரந்தன் மற் றும் கண்டாவளை கமநல சேவை நிலையங்கள் ஸ்தா பிக்கப்பட்டதன் பின்னர் புதிய கமக்கார அமைப்புகள் உருவாக்கப்பட்டு வருகின் றன. அந்த வகையிலே கண்டாவளை பிரதேசத் திற்கு உட்பட்ட ஊரியான் மேற்கு மற்றும் வெளிக் கண்டல் ஆகிய கமக்கார அமைப்புகள் தனித்தனி அமைப்புக்களாகப் பதிவு செய்யப்பட்டு விவசாயிக ளின் நலன்கள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன எனவும் புலிங்க தேவன் முறிப்பு கமக்கார அமைப்பு பிரிவுக்கு உட்பட்ட உடுப் பாற்றுக்கண்டல் விவசாயி கள் தங்களையும் தனி யான கமக்கார அமைப்பாக மாற்று வதற்கு எழுத்து மூல கோரிக்கை விடுத்துள் ளனர்.

இக்கோரிக்கைக் கடி தங்கள் கமநல அபிவிருத்தி அதிகார சபை, அரச அதிபர், நீர்ப்பாசனத் திணைக்களம், பிரதேச செய லகம் ஆகிய வற்றிற்கு சமர்ப்பிக்கப் பட்டு ள்ளன. (நி-315)

# அதிகரிக்கும் மதுபானசாலைகள் மௌனம் காக்கும் அதிகாரிகள்

## பொதுமக்கள் விசனம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மூன்று மாத காலத் திற்குள் 20 இற்கு மேற்பட்ட மதுபானசாலைகள் திறக்க பட்டுள்ளதாக அப்பிரதேச மக்களும் புத்தி ஜீவிகளும் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த மாவட்டத்தில் தற் போது 20 இற்கும் மேற்பட்ட மதுபானசாலைகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டு மது பானசாலைகள் திறக்கப்பட் டுள்ளன.

இவ்வாறு மதுபான சாலை கள் திறக்கப்படுவதனால் வீதி விபத்துக்களும் குடும்ப வன் முறைகளும் அதிகரிப்பதுடன் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ள தாகவும் கல்விச் சமூகத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் உரிய அதி காரிகள் கவனத்தில் எடுக்கா தது ஏன் என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ள னர். (நி-315)

# கிளிநொச்சியில் நடைபெற்ற தேசிய சாரணர் வாரம்


(தருமபுரம்)

தேசிய சாரணர் வாரத்தின் முதலாவது நாள் நிகழ்வுகள் நட்பு என்ற தொனிப்பொருளில் கிளிநொச்சியில் முன்னெ டுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட சார ணிய சங்க தலைவர் கி.விக்கி னராஜா தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் மாவட்ட அர சாங்க அதிபர் எஸ் .முரளீதரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு குறித்த வாரத்தினை ஆரம்பித்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நளா யினி இன்பராஜ், மாவட்ட சார ணிய ஆணையாளர் சு.விக்கி னேஸ்வரன், பாடசாலைகளின் சாரணிய பொறுப்பாசிரியர்கள், மாவட்ட செயலக உத்தியோகத் தர்கள் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மத்திய கல் லூரி, திருவையாறு மகா வித்தியா லயம், கிளிநொச்சி மகாவித்தியா லயம், வட்டக்கச்சி ஆரம்ப வித் தியாலயம், வட்டக்கச்சி மத்திய கல்லூரி போன்ற பாடசாலை மாணவர்கள் 140 பேர் வரை கலந்துகொண்டனர். (நி-316)



கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அமைந்துள்ள புனித ஆரோக்கிய அன்னை சிற்றாலய வருடாந்த திருவிழா, வைத்தியசாலை ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை சில்வெஸ்ரர்தாஸ் ஒழுங்குபடுத்தலில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

திருவிழாத் திருப்பலியை கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை பெனறும் நற்கருணைவிழா திருப்பலியை ஆரோபணம் சிறுவர் இல்ல இயக்குநர் அருட்தந்தை சசிகரனும் தலைமைதாங்கி ஒப்புக் கொடுத்தனர்.

(படம்: யதுபாஸ்கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 589





அப்போது, சற்றுத்தூரத்தில் மதுராந்தகருடைய பரிவாரம் போவது தெரிந்தது. மதுராந்தகருக்கு அருகில் குதிரை மேலிருந்தவன் ஒரு தடவை திரும்பிப் பார்த்தபோது பினாகபாணிக்கு ஐயம் உதித்தது. ஆனால் அவன் விரைவாகச் சென்று அரண்மனையில் புகுந்து விட்டபடியால் சந்தேகத்தை தீர்த்துக் கொள்ள முடியவில்லை.

**19 ஆம் அத்தியாயம்**
**சமயசஞ்சீவி**

நம்பியாண்டார் நம்பிக்கு நடந்த உபசாரத்தின் போது பினாகபாணி அந்தச் சபா மண்டபத்துக்குள் பிரவேசிக்க முடியவில்லை. வாசற்படிக்கு அப்பால் நின்ற கூட்டத்தில் நின்று உள்ளே பார்த்துக் கொண்டிருந்தான். வந்தியத்தேவனுடைய கவனம் வேறு இடத்தில் இருந்தது என்பதை முன்னமே பார்த்தோம். பினாகபாணியோ வந்தியத்தேவன் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். இவ்வளவையும் பார்த்தும், பார்க்காததுபோல் கவனித்துக் கொண்டிருந்தான் இன்னொருவன். அவன்தான் நம் பழைய தோழனாகிய ஆழ்வார்க்கடியான்.

இளவரசர் மதுராந்தகருக்கு நிமித்தம் பார்த்துச் சொல்லி அவர் மனத்தைக் கலக்கிவிட்டு வந்தியத்தேவன் அரண்மனைக்கு வெளியில் வந்தான். அங்கே சற்றுத் தூரத்தில் நின்று காத்துக் கொண்டிருந்த வைத்தியர் மகன் அவனை நெருங்கி வந்து, "அப்பனே! நீ யார்?" என்று கேட்டான்.

வந்தியத்தேவன் பினாகபாணியைப் பார்த்துத் திடுக்கிட்டான். அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், "என்ன கேட்டாய்?"

"நீ யார் என்று கேட்டேன்" என்றான்.

"நான் யார் என்றா கேட்கிறாய்? எந்த நானைக் கேட்கிறாய்? மண், நீர், தேயு, வாயு, ஆகாசம் என்கிற பஞ்ச பூதங்களினாலான இந்த உடம்பைக் கேட்கிறாயா? உயிருக்கு ஆதாரமான ஆத்மாவைக் கேட்கிறாயா? ஆத்மாவுக்கும் அடிப்படையான பரமாத்மாவைக் கேட்கிறாயா? அப்பனே! இது என்ன கேள்வி? நீயும் இல்லை, நானும் இல்லை.

எல்லாம் இறைவன் மயம்! உலகம் என்பது மாயை. பசு, பதி, பாசத்தின் உண்மையை திருநாரையூர் நம்பியைப் போன்ற பெரியோர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்!" என்று கூறிவிட்டு வந்தியத்தேவன் அரண்மனை வாசலில் நின்ற தன் குதிரை மேல் தாவி ஏறினான். குதிரையைச் சிறிது நேரம் வேகமாகச் செலுத்திய பிறகு வைத்தியர் மகன் தன்னைப் பின் தொடரவில்லை என்று தெரிந்துகொண்டு மெல்ல மெல்ல போனான்.

ஆனால் வைத்தியர் மகன் அவ்வளவு எளிதில் ஏமாந்து போகிறவனா? அவனது சந்தேகம் இப்போது நிச்சயமாகி விட்டது. நகர்க் காவல் அதிகாரியிடம் சென்று செய்தியைத் தெரிவித்தான். அதிகாரி அனுப்பிய இரண்டு காவல் வீரர்களை அழைத்துக் கொண்டு அவனும் ஊரைச் சுற்றி வந்தான். அவன் எதிர்பார்த்தது போலவே வந்தியத்தேவனை ஒரு நாற்சந்தியில் சந்தித்தான்.


"இவன்தான் ஒற்றன்! இவனைச் சிறைப்பிடியுங்கள்!" என்று கூவினான். "என்னடா அப்பா! உனக்குப் பைத்தியமா?" என்றான் வல்லவரையன்.

"யாரைப் பைத்தியமா என்று கேட்கிறாய்? இந்த உடம்பையா, இதற்குள் இருக்கும் உயிரையா, ஆத்மாவையா! பரமாத்மாவையா! அல்லது பசு, பதி, பாசத்தையா?" என்று கூறினான் வைத்தியர் மகன் பினாகபாணி.

"நீ இப்பொழுது உளறுவதிலிருந்தே நீ பைத்தியம் என்று தெரிகிறதே!"

"நான் பைத்தியம் இல்லை உன்னோடு கோடிக்கரை வரையில் வந்த வைத்தியன்! காவலர்களே! தஞ்சாவூர்க் கோட்டையிலிருந்து தப்பி, இலங்கைக்கு ஓடிய ஒற்றன் இவன்தான்! உடனே இவனைச் சிறைப்பிடியுங்கள்!"

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## ஏன் மௌனம்

உலகில் இருக்கக் கூடிய அத்தனைப் பழங்களும் ஒருமுறை ஒன்று சேர்ந்து ஒரு மாநாட்டைக் கூட்டின. தலைமையேற்றுப் பேசிய பழம் உலகில் உள்ள பழங்களில் எந்தப் பழம் அதிக சுவையுடையது. சிறப்புடையது. என்ற கேள்வியுடன் தன் தலைமை உரையை முடித்துக் கொண்டது. பழங்கள் ஒன்றுக்கொன்று அடித் தொண்டையில் பேசின. அப்பிள் பழம், செரிப்பழம் அன்னாசிப் பழம், கொய்யாப் பழம், மாதுளம்பழம் எல்லாம் ஒவ்வொன்றும் தானே அதிக சுவை உடையது என்று கூறி மார்தட்டின.

ஆனால் திராட்சைப் பழம் மட்டும் எதுவும் பேசாமல் அமைதியுடன் இருந்தது. எல்லாப் பழங்களும் திராட்சைப் பழத்தை வியப்புடன் பார்த்த வண்ணம் இருந்தன. திராட்சைப் பழம் எதையாவது பேசும் என்று எதிர்பார்த்தன. ஆனால் அதுவோ மௌனம் காட்டியது.

இதனால் மற்ற பழங்கள் திராட்சை பழத்தை பார்த்து இழிவாக சிரித்தன. அப்போது பலாப் பழம் ஒன்று உருண்டு வந்தது. அது திராட்சைப் பழத்தைப் பார்த்து அன்புடன் கேட்டது.

திராட்சையே நீ ஏன் மௌனமாக நிற்கிறாய்? எனக்குத் தெரியும் உலகில் உள்ள பழங்களிலேயே சிறப்புப் பெற்றவன், நன்மையைச் செய்பவன் நலம் அளிப்பவன். சுவை நிரம்பியவன் நீதான் என்று! ஆனால் அதையும் தாண்டிய ஒரு சிறப்புத் தகுதி உன்னிடம் உண்டு, அதை நீயே உன் வாயால் சொல்ல வேண்டும் அப்போது தான் மற்றப் பழங்களும் உன் தகுதி பற்றி அறிந்து கொள்ளும் என்று கூறியது.

திராட்சைப் பழம் அமைதியாகக் கூறியது அண்ணா நீங்கள் எல்லாருமே தனித்தனியாகவே வருகிறீர்கள். தனித்தனியாகவே விற்பனை செய்யப்படுகிறீர்கள் ஆனால், நாங்களோ ஒரு கூட்டமாக கொத்தாக வளருகிறோம். நாங்கள் ஒருவர் வளர்வதற்கு மற்றவர்களுக்கு இடம் தருகிறோம். விட்டுக் கொடுத்து வாழ்கிறோம். விற்பனைக்குப் போகும் போதும் கொத்தாகவே செல்கிறோம். தனியாக நாங்கள் விலை போவதில்லை.

"எங்களைச் சாறாக்கிக் குடிக்கும் போது கொத்துக் கொத்தாகவே அழிந்து போகிறோம். வாழ்விலும் வளர்ச்சியிலும் மரணத்திலும் நாங்கள் இணை பிரியாமல் இருக்கிறோம் அதனால்தான் நாங்கள் சிறந்தவர்கள் என்ற அங்கீகாரத்தை மனிதர்களிடமிருந்து அடைந்திருக்கிறோம். வேறு காரணமில்லை என்றது.

மற்றப் பழங்கள் வெட்கத்தால் தலை குனிந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கையின் சக்தியை தூய குறிக்கோளுடன் இணைத்துச் செயற்படுத்தும்போது எதையும் எளிதில் சாதிக்கலாம். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கு மாகாணத்தின் ஆளுநராக பொருத்தமானவரை நியமியுங்கள்

அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் குறிப்பிட்ட ஆளுநர்கள் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளனர்.

இதற்குள் வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர்களும் அடங்குவர்.

இவ்வாறு ஆளுநர்கள் இராஜினாமாச் செய்தது ஏன்? என்பதுதான் புரியாமல் உள்ளது.

அதாவது, அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் இயங்க வேண்டியவர்கள்.

அவர்களின் கடமை; தத்தம் மாகாண சபைகளின் நிர்வாகங்களை நேர்த்தியாக நடத்துவது, மாகாண அரசு முன்மொழிகின்ற திட்டங்களை அனுமதிப்பது, மாகாண அரசு இல்லாத சந்தர்ப்பங்களில் தமது நியாயாதிக்கத்துக்குட்பட்ட மாகாண சபைகளின் நிர்வாகங்களைத் திறம்படச் செய்வதாக இருக்கும்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றதும் வடக்குக் கிழக்கு உள்ளிட்ட ஆறு ஆளுநர்கள் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளனர்.

இங்குதான் குறித்த ஆளுநர்கள் அரசியல் கட்சி சார்ந்தவர்களா? தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவதற்காக பிரசாரம் செய்தவர்களா? என்ற கேள்வி எழுகிறது.

அவ்வாறில்லையாயின், அவர்கள் தமது ஆளுநர் பதவியைத் தாமாக முன்வந்து இராஜினாமாச் செய்ய வேண்டியதன் தேவை என்ன? என்பதுதான் நம் வாதம்.

இவை ஒரு புறமிருக்க; வடக்கு மாகாணத்துக்கான புதிய ஆளுநராக நியமிக்கப்படுபவர் அரசியல் சாராதவராக, மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை உணர்ந்தவராக, அப் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடியவராக, உடனடித் தீர்மானங்களை எடுக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

அதேநேரம் வடபகுதி மக்களின் பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லுகின்ற ஆற்றலும் அவருக்கு அவசியமாகும்.

இதை நாம் கூறுவதற்கு, கடந்த காலங்களில் வடக்கின் ஆளுநர்களாக இருந்த தமிழர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்ற பட்டறிவு காரணமாகும்.

உண்மை. வடக்கு மாகாணத்தின் ஆளுநர்களாக இருந்த தமிழர்கள் சிங்களப் பேரினவாதத்துக்கு அடிபணிந்து செயலாற்றினர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை அவர்கள் கண்டுகொள்ளவே இல்லை என்பது சத்தியமான உண்மை.

தங்களின் ஆளுநர் பதவியைக் காப்பாற்றுவதற்காக தமிழ் மக்களை வஞ்சித்தனர். தமது கடமையைச் சரிவரச் செய்ய மறுத்தனர்.

எனவே வடக்கின் ஆளுநராக, நேர்மையுள்ள – சிறப்பாகப் பணியாற்றக்கூடிய – செயற்றிறன் மிக்க – நடுநிலையாளர் ஒருவரை நியமிப்பதே சாலப் பொருத்தமாகும்.

## நாட்டில் நிலவும் ஊழல் கலாசாரம் இல்லாதொழிக்கப்படும் என எதிர்பார்க்கிறோம்

### அநுரவுக்கான வாழ்த்தில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

அரசியல், சமூக மற்றும் பொருளாதார ரீதியில் நாட்டில் நிலவும் ஊழல் கலாசாரம் இனிமேல் இல்லாதொழிக்கப்படும் என எதிர்பார்ப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், நாட்டின் 9-வது நிறைவேற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் வலிமையும் தைரியமும் புதிய ஜனாதிபதிக்கு இருக்கும் என்றும் நம்புவோம்.

“சட்டத்தின் ஆட்சியும் நீதித்துறையின் சுதந்திரமும் தடையின்றி பேணப்படும் என்று புதிய ஜனாதிபதி மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையையும், திறமையற்ற அரச நிர்வாகத்தையும், அரசியல் ரீதியாக எமது தாய்நாடு முழுவதும் பரவியுள்ள ஊழல் கலாசாரத்தையும் மக்கள் காப்பாற்றுவார்கள், சமூக மற்றும் பொருளாதார விதிமுறைகள் இனி அகற்றப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.”

மேலும், இலங்கை சமூகத்தை ஒருங்கிணைத்து, இனம், மதம், சாதிகள் அற்ற இலங்கையை உருவாக்கி எமைப் பாதித்துள்ள இனங்களுக்கிடையிலான வேறுபாடுகள் களையப்பட வேண்டும் என்ற மாபெரும் பணிக்கு ஜனாதிபதி வலுவான அடித்தளத்தை இடுவார் என எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளது. (ம-7)

## குறைகளைத் திருத்திக்கொண்டு தேர்தலில் மீண்டும் போட்டியிடுவேன்

### நாமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் ஊடாக மக்கள் சிறந்த செய்தியை குறிப்பிட்டுள்ளார்கள். எம்மில் காணப்படும் குறைகளை திருத்திக் கொண்டு எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிடுவோம். சந்தர்ப்பத்துக்கு ஏற்ப கட்சித் தாவலில் ஈடுபடுபவர்களுக்கு மக்கள் சிறந்த பாடத்தை கற்பித்துள்ளார்கள் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (23) காலை மாவட்ட தொகுதி அமைப்பாளர்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாரிய சவால்களுக்கு மத்தியில் தான் தேர்தலில் போட்டியிட்டேன். எம்முடன் இருந்தவர்கள் எம்மை விட்டுச் சென்றார்கள். சவால்களை கண்டு நான் அஞ்சவில்லை. என்னைப் பொறுத்தவரையில் ஏற்றுக் கொண்ட சவாலில் நான் வெற்றி பெற்றுள்ளேன். படுதோல்வி என்று குறிப்பிட முடியாது. வெற்றியோ தோல்வியோ அல்லது அதனை ஏற்றுக் கொள்வேன்.

ஏனெனில் ஏதும் நிலையானதல்ல, தேர்தல் மேடைகளில் பொய்யுரைக்கவில்லை. எவருக்கும் பாதிப்பற்ற கொள்கைத் திட்டங்களை முன்னிலைப்படுத்தினேன். நாட்டைப் பிளவுபடுத்தும் வாக்குறுதிகளை வழங்கவில்லை. இந்த தேர்தல் ஊடாக மக்கள் சிறந்த செய்தியை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

எம்மிடமுள்ள குறைகளைத் திருத்திக் கொண்டு எதிர்வரும் காலங்களிலும் போட்டியிடுவேன். ஒருபோதும் தளர்வடையமாட்டேன். சந்தர்ப்பத்துக்கு ஏற்ப கட்சித் தாவல்களில் ஈடுபடுபவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் கற்பித்துள்ளார்கள். தேசியத்தையும், தேசிய உற்பத்திகளையும் முன்னிலைப்படுத்தி செயற்படுவோம். ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் சிறந்த தீர்மானங்களை எடுப்பாராயின் நிபந்தனையற்ற வகையில் ஆதரவு வழங்குவோம் என்றார். (ம-7)

## அரச வாகனங்களை ஒப்படைத்தார் மகிந்த அமரவீர

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சராகக் கடமையாற்றிய மகிந்த அமரவீர, தாம் பயன்படுத்திய அலுவலகம் மற்றும் அரச வாகனத்தை அந்த அமைச்சின் செயலாளரிடம் கையளித்தார்.

அத்துடன், நாட்டின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு அனைத்து வகையிலும் சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

அதேநேரம், அமைச்சின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான ஆதரவை வழங்கிய பணியாளர்களுக்கும் முன்னாள் அமைச்சர் மகிந்த அமரவீர நன்றி தெரிவித்துள்ளார். (ம-7)

## ஓகஸ்ட் மாதத்தின் பணவீக்கம் குறைவு

(கொழும்பு)

2024 ஜூலை மாதத்திற்கான இலங்கையின் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் மாதாந்திர நுகர்வோர் பணவீக்கம் வெளியாகியுள்ளது.

இதனை சனத்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இதற்கமைய ஜூலை 2024 இல் 2.5% ஆக இருந்த பணவீக்கம் ஜூலை 2024 இல் 1.1% ஆகக் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் ஜூலை 2024 இல் 2.9% ஆக பதிவான உணவு வகை பணவீக்கம் ஓகஸ்ட் 2024 இல் 2.3% ஆகக் குறைவடைந்துள்ளது.

மேலும், 2024 ஜூலையில் 2.2% ஆக இருந்த உணவு அல்லாத வகையின் பணவீக்கம் ஓகஸ்ட் 2024 இல் 0.2% ஆகக் குறைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான எவரையும் மீண்டும் கட்சியில் இணைக்கோம்

### பொதுஜன பெரமுன

(கொழும்பு)

ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான எவரையும் மீண்டும் கட்சியில் இணைக்கமாட்டோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்றத் தேர்தலை எவ்வாறு அணுகுவது என்பது குறித்து விரிவான கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை (24) நெலும் மாவத்தையில் நடைபெற்றுள்ளது.

அதில், ஜனாதிபதித் தேர்தலின் போது கட்சியில் இருந்து விலகியவர்கள் மீண்டும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து கொள்வதா? என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான எவரையும் மீண்டும் சேர்க்க வேண்டாம் என்றும் கட்சி முடிவு செய்துள்ளது. அத்தோடு, முன்னதாக கட்சியில் இருந்து விலகியவர்களில் பலரை மீண்டும் இணையுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும் ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

20

வழக்கை விசாரித்த நீதிமன்றம் ஐக்கிய இராச்சிய அரசாங்கத்தின் அனுமதியின்றி ஸ்கொட்லாந்து சுதந்திர கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை நடத்த முடியாதென தீர்ப்பளித்துள்ளது. அதாவது அரசியல் யாப்பு விவகாரங்கள் ஐக்கிய இராச்சிய அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டவை என்பது உச்சநீதிமன்றத்தின் துணிபு.

இந்த வழக்கில் கேள்விக்கு உட்படுத்தப்பட்ட அடிப்படை விடயம், ஸ்கொட்லாந்தின் சுயநிர்ணய உரிமை. 1707இல் ஸ்கொட்லாந்தும் இங்கிலாந்தும் ஒன்றிணைந்தபோதும், அதற்குப் பின்னர் 1998இல் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டபோதும் உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்கள் உண்டு.

இந்த வழக்கு விசாரிக்கப்பட்ட போது ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி சுயநிர்ணய உரிமை பற்றிய வாதத்தை முன்வைத்தது. இந்த விடயம் பற்றிய உள்ளூர் சட்டங்களுக்கு வியாக்கியானம் கொடுக்கும் சந்தர்ப்பத்தில் சுயநிர்ணய உரிமை பற்றிய சர்வதேச சட்டங்களுக்கு ஏற்புடையதாக இருக்கத்தக்க வகையில் வியாக்கியானம் கொடுக்க வேண்டும் என்று ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி வாதிட்டது.

ஐக்கிய இராச்சிய நீதிமன்றமோ தமது தீர்ப்பில் கியூபெக் மாநிலம் தொடர்பான வழக்கொன்றில் கனேடிய உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை உதாரணம் காட்டியது. சுயநிர்ணய உரிமை பற்றிய விவாதங்கள் காலனித்துவ ஆட்சி அல்லது வெளிநாட்டு ஆதிக்கம் சம்பந்தப்பட்ட நிலைமைகளுக்கு மாத்திரமே பொருந்தும் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதாவது காலனித்துவ ஆட்சியின் மூலம் அல்லது வெளிநாட்டு ஆதிக்கத்தின் மூலம் ஒடுக்கப்பட்டவர்கள் என்ற பிரிவினருக்கே "சுயநிர்ணய" உரிமை பற்றி வாதிட உரிமை உண்டு என்பது போன்ற தீர்ப்பு அதுவாகும்.

ஸ்கொட்லாந்து இங்கிலாந்தின் காலனித்துவ தேசமாக இருக்கவில்லை இங்கிலாந்தின் மூலம் ஒடுக்கப்படவில்லை என்பது உண்மை தான். இருந்தபோதிலும், ஐக்கிய இராச்சியம் என்ற கட்டமைப்புக்குள் தாம் கூடுதலாக சம்பாதித்த போதும் இங்கிலாந்து மக்களை விடவும் கூடுதலாக வரி செலுத்தி சலுகைகளை இழப்பதாக ஸ்கொட்லாந்து மக்கள் உணர்கிறார்கள். இது பாரபட்சம் என்று கருதுகிறார்கள்.

### இலங்கைத் தமிழ் மக்களின் சுயநிர்ணயமும் மக்கள் இறைமையும்

"தாம் விரும்புகின்ற அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார மேம்பாட்டை அடைந்து கொள்வதற்கான உரிமை" சுயநிர்ணயம் எனப்படுகிறது

சுய நிர்ணயம் தொடர்பான சர்வதேச சட்டம் காலத்துக்குக் காலம் பரிணாமமடைந்த தொன்றாகும். இதன்படி இதற்கு அடிப்படையான அரசியல் கோட்பாடுகளும் காலத்துக்குக் காலம் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இவ் எண்ணக் கருவிலுள்ள பிரதானமான அரசியல் கோட்பாடு யாதெனில், "மக்கள் இறைமை" என்ற எண்ணக்கருவாகும்.

இதன்பொருள் யாதெனில், தாம் விரும்புகின்ற அரசியல் முறையொன்றை, வெளிச் சக்திகளின் நிர்ப்பந்தங்களின்றி சுதந்திரமாகத் தெரிவு செய்வதற்கு எல்லா மக்களுக்கும் உரிமை உண்டு என்பதாகும். இதன் மூலம் தாம் விரும்புகின்ற அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார மேம்பாட்டை அடைந்து கொள்வதற்கான உரிமையும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 1975 ஹெல்சின்கி கூற்றின் மூலம் சுய நிர்ணயம் என்பதற்கு இவ்வாறே வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது.

சுய நிர்ணய உரிமை என்று இலங்கையில் தற்போது பேசப்படும் மூன்று விடயங்களைக் காணக் கூடியதாயுள்ளது. அவை:

(1) இலங்கையின் தமிழ் மக்களை தனி ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்ளுதல்.
(2) ஒரு தேசிய இனம் என்ற ரீதியில் தனியானதொரு நிலப்பரப்பு உள்ளதென்பதை ஏற்றுக் கொள்ளுதல்.
(3) இந்த ஏற்றுக் கொள்ளுதலின் பிரகாரம், பிராந்திய சுயாட்சிக்கான உரிமை உள்ளதென்பதை ஏற்றுக் கொள்ளுதல்.

இந்த மூன்று விடயங்களும் "உள்ளக சுயாட்சி" என்ற கருத்தின் கட்டுக்கோப்பினுள் வருகின்றதென்பதைக் காண்கிறோம். இதன் மூலம், இலங்கையின் தமிழ் தேசிய பிரச்சினையை அரசியல் ரீதியாகத் தீர்த்து வைக்கின்ற சட்டத்தை, சமஷ்டி அரசியலமைப்பினுள் தயாரிக்க இடமுண்டு என்பது வெளிப்படை.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு உள்ளக சுய நிர்ணயத்துக்கான, அதாவது பிராந்திய சுயாட்சிக்கான உரிமை உள்ளதென்று ஏற்றுக் கொள்வதாயிருப்பின், அதனை எவ்வாறு அமுலாக்கலாம் என்பது மிகப் பெரிய கேள்வியாக உள்ளது.

இலங்கையின் அனைத்துச் சமூகங்களுக்கும் சமத்துவ உரிமைகளை உறுதிப்படுத்தும் அமைதியான நீதியான எதிர்காலத் தொலைநோக்கே சமஷ்டி எண்ணக்கரு. இதன் கட்டமைப்பு ஐக்கிய இலங்கையாகும். 1926 இல் இலங்கைக்கு ஒரு சமஷ்டி ஆட்சிமுறை குறித்த ஒரு யோசனையை எஸ். டப்ளியு. ஆர். டி பண்டாரநாயக்கா முன்வைத்திருந்தார்.

இது தொடர்பாக திரு. எஸ். டப்ளியு. ஆர். டி பண்டாரநாயக்க அவர்கள் வெளியிட்ட கருத்து ஆறு கட்டுரைகளாக 1926ஆம் வருடம் மே - ஜூன் மாதங்களில் சிலோன் மோர்னிங் லீடர் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது என்று பதிப்பாசிரியர் லயனல் குருகே அவர்களால் வெளியிடப்பட்ட "இலங்கையில் சமஷ்டி எண்ணக்கருவின் தோற்றமும் வளர்ச்சியும் (1926-2005)" என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

டொனமூர் ஆணைக்குழுவின் முன்பாக கண்டிச் சிங்களவர்களின் பிரதானிகளும் இலங்கைக்கு சமஷ்டி ஆட்சிமுறையே உகந்தது என்று நியாயப்படுத்தினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சிங்களத் தலைவர்களால் முன்னுரை எழுதி தொடக்கப்பட்ட ஒரு விவகாரமாகவே சமஷ்டி அமைப்பு என்னும் கருவூலம் இலங்கையில் உருவாக்கப்பட்டது.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இலங்கை தேசியச் சங்கம் இணைந்து இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் ஓர் அவணமாக 1944.10.02இல் யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் கூறப்பட்டிருந்தவை.

- இலங்கை மக்களின் சமத்துவத்தையும் இறைமையையும் அங்கீகரித்தல்
- சிங்கள, தமிழ் தேசிய இனங்களுக்கு சுதந்திரமும் சுயநிர்ணய உரிமையும் உண்டு என்பதை அங்கீகரித்தல்
- மேற்படி தேசிய இனங்கள் தமக்கென தனியான அரசை நிறுவ விரும்பினால் அதற்கான உரிமையை அங்கீகரித்தல்
- இரு தேசிய இனங்களினதும் மரபு வழித்தாயகம், மொழி, பொருளாதார வாழ்வு, கலாசாரம், உளவியல் பாங்கு என்பவற்றை அங்கீகரித்தல்.
- சிறுபான்மையினரின், அரசியல், சமூக, பொருளாதார, கலாசார, கல்வி, மற்றும் மொழி உரிமைகளைச் சட்டரீதியாக அங்கீகரித்தல்
- சாதி, இனம், மற்றும் சமூக அந்தஸ்து என்பவற்றிற்கு அமைய சலுகைகள், அநீதிகள் என்பவற்றை சட்டரீதியாக இல்லாதொழித்தல்
- மேற்கூறியவற்றை மீறுவோருக்கு தண்டனை விதிக்க வேண்டும்.

(இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 1944இல் வெளியிட்ட பிரகடனமும் இதற்குச் சமமானது)

இலங்கை தேசிய சங்கம் (Ceylon National Congress, CNC) என்பது இலங்கையில் 1919 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு தேசியவாத அரசியல் கட்சியாகும். இலங்கை பிரித்தானிய ஆட்சியின் கீழ் இருந்த போது, தேசியவாதம் எழுச்சியுற்றிருந்த காலகட்டத்தில் நிறுவப்பட்டது. இச் சங்கம் 1948 ஆம் ஆண்டில் இலங்கை விடுதலை பெறுவதற்கு மிகவும் முக்கிய பங்கு வகித்திருந்தது. ஆரம்பத்தில் சேர்.பொன்னம்பலம் அருணாசலம் இதன் நிறுவனத் தலைவராக இருந்து செயற்பட்டார்.

அரசமைப்பு சீர்திருத்தம் பற்றி ஆராய்வதற்காக பிரிட்டிஷ் அரசினால் நியமிக்கப்பட்ட சோல்பரி ஆணைக்குழு 1944 இல் இலங்கைக்கு வந்த போது, அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட்ட ஒரு கட்டமைவையோ, அல்லது ஒரு சமஷ்டி அமைப்பையோ நாடு கொண்டிருக்க வேண்டும் என்ற எந்தத் தீர்க்கமான முன்மொழிவும் தமிழ்த் தலைவர்கள் உட்பட எந்த அமைப்பினாலும் முன்வைக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. அதேபோல் சோல்பரி ஆணைக்குழுவும் சுயாட்சி பற்றி எந்தவொரு பரிந்துரையும் செய்யவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1950களில் சமஷ்டி ஆட்சிமுறைச் சிந்தனையை தமிழரசுக் கட்சியின் கொள்கையாக எடுத்துக்கொண்ட பின்பே சமஷ்டிவாதம் சர்ச்சைக்குரியதாகவும் உணர்ச்சி பூர்வமானதாகவும் மாறியது.

இன்று தமிழர் சிங்களவர்களுக் கிடையே மட்டுமல்ல தமிழர்களுக்கிடையேயும் சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது.

### வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரியின் கருத்து

"அதிகாரப்பகிர்வுமூலம் நாடு பிளவுபடும் எனக் கூறப்படுவது போலியான மாயையாகும். அதிகாரப்பகிர்வு என்பது அவசியம். அதற்கான கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட வேண்டும்." - என்று வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுர இன்று...

இலத்திரனியல் ஊடகங்களிலும் நேரடியாக ஒளிபரப்பப்படவுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது. (ம-7)

## வடக்கின்...

பதியாக அநுர குமார திஸாநாயக்க பொறுப்பேற்ற நிலையில், தேசிய மக்கள் சக்தியின் புதிய அமைச்சரவை நேற்றுப் பொறுப்பேற்றுள்ளது.

அதேவேளை, வடக்கு மாகாண ஆளுநராகப் பணியாற்றிய பி.எஸ்.எம். சார்ள்ஸ் தனது பதவியை நேற்று முன்தினம் இராஜினாமாச் செய்துள்ளதாக வடமாகாண ஆளுநரின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இந்நிலையில் மாகாண ஆளுநர்களுக்கான புதிய நியமனங்கள் இன்று வழங்கப்படவுள்ளது.

அந்தவகையில், வடக்கு மாகாண ஆளுநராக, முன்னாள் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் இன்று நியமிக்கப்படவுள்ளார்.

அதற்கமைய அவர் நேற்றிரவு கொழும்பு பயணமானார். (ம-7)

## நாட்டை...

ஜனாதிபதித் தேர்தலில் மாற்றத்தை விரும்பும் மக்களின் தீர்மானங்களை தாம் ஏற்றுக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை எமது தோல்விக்கான காரணங்களைக் கண்டறிந்து அதனைச் சரி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் தமது கட்சியை மறுசீரமைக்கப் போவதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது. (ம-7)

## ஹரினி...

இந்த அமைச்சரவைப் பதவியேற்பு நிகழ்வு நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

அதற்கமைய, புதிய பிரதமராகத் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

அவர் இலங்கையின் பிரதமராகப் பதவியேற்கும் மூன்றாவது பெண் ஆவார்.

இதற்கு முன்னதாக உலகின் முதல் பெண் பிரதமரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் இலங்கையின் பிரதமராகப் பதவி வகித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சரவையின் தலைவரான ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பிரதமர் ஹரினி அமரசூரிய, பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், ஆகியோரிடையே அமைச்சுகள் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஜனாதிபதியின்...

பட்டுள்ளது.

**ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க**

பாதுகாப்பு, நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை உருவாக்கம் மற்றும் திட்டமிடல், சுற்றுலாத்துறை, வலு சக்தி, விவசாயம், காணி, கால்நடைகள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள்.

**பிரதமர் ஹரிணி அமரசூரிய**

நீதித்துறை, அரச பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சு, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், பெண்கள், குழந்தைகள் மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு மற்றும் விளையாட்டு, வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு, சுகாதாரம்.

**விஜித ஹேரத்**

புத்தசாசனம், மதம் மற்றும் கலாசார விவகாரங்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் வெகுஜன ஊடகங்கள், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்கு வரத்து, பொதுப் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரங்கள், சுற்றுச்சூழல் மற்றும் வன விலங்குகள், வன வளங்கள், நீர் வழங்கல், தோட்டங்கள் மற்றும் சமூக உட்கட்டமைப்பு, கிராம மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, வீட்டு வசதி மற்றும் கட்டுமானம். (ம-7)

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்கினால் ஆதரவு

## நாமல் தெரிவிப்பு



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்கி தேர்தல் முறையில் மாற்றங்களை மேற்கொண்டால் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அதற்கு ஆதரவளிக்கும் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

1994 முதல் ஜனாதிபதிகள் தாங்கள் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்குவோம் என தெரிவித்துள்ள போதிலும் இன்னமும் அதனைச் செய்யவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கான சிறந்த தருணம் இது என அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்கவிரும்பினால் அதனை தாமதிக்கக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## பாராளுமன்றம்...

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான வர்த்தமானியில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கையொப்பமிட்டதாக ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நஜித் இந் திக்க தெரிவித்துள்ளார்.

இந்த வர்த்தமானி அறிவிப்பு நேற்று நள்ளிரவு அச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் கையொப்பத்துடன் இது தொடர்பான அறிவிப்பு ஜனாதிபதி செயலகத்திலிருந்து அரசாங்க அச்சகத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. (ம-7)

## கொழு...

திஸாநாயக்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கொழும்பு காலி முகத்திடலில் அனைத்து வாகனங்களையும் ஒப்படைக்க வேண்டும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கீழ் புதிய அமைச்சரவை நேற்று பதவியேற்ற பின் இவ் அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நவம்...

நண்பகல் வரையில் பாராளு மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.09.24
சீட்டிழுப்பு இலக்கம் 5605
R 9 5 1 3 0 4
அத சம்பத
R 1 3 0 4
சீட்டிழுப்பு இலக்கம் 180

தன நிதானய
திகதி - 2024.09.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1635
K 05 10 28 47 K
22968

மெகா பவர்
திகதி 24/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1953
P 05 33 42 71 77
53457

லக்கி 7 VIP
திகதி 2024.09.24
சீட்டிழுப்பு இலக்கம் 0431
Z 0 1 5 4 2 0 Z

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3847
சீட்டிழுப்பு திகதி 24.09.2024
N 16 51 53 56
N 82874

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.24
சீட்டிழுப்பு இலக்கம் 914
கும்பம் 05 30 38 41 கும்பம்
46573 20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2579 வர்ணம் வெளிர் நீலம்
சீட்டிழுப்பு திகதி 24.09.2024 தினம் செவ்வாய்
வெற்றி இலக்கங்கள் 08 28 55 59 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,275,924.00

உத்தியோகபூர்வ முடிவுகள்
24.09.2024 வெற்றி வாரம் 313 வர்ணம் சிவப்பு
Y 0 4 4 2 7 4
58133
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,546,028.00

சனிதா
திகதி 2024.09.24 வெற்றி வாரம் 4740 வர்ணம் பச்சை
16 52 60 74 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,871,775.60
1 2 3 6 5

சசிரி
வெற்றி வாரம் 532
சீட்டிழுப்பு திகதி 2024.09.24
வெற்றி இலக்கங்கள் 33 34 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,694,560/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4291 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.09.24 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 25 30 37 42 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,135,195.20
218017

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 29 17 44 59 68
1755
24.09.2024 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 546,540,929.80

அட கோட்டிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2405
சீட்டிழுப்பு திகதி : 20240924
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,112,615.20
20 29 57 74 N
644440


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்தலுக்கு ரூ. 11 பில்லியன் செலவாகும்

## தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

பொதுத்தேர்தல் செலவுகளுக்கு 11 பில்லியன் ரூபா அவசியமாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (24) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாராளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் 7 முதல் 17 நாட்களுக்குள் போட்டியிட உத்தேசிக்கும் வேட்பாளர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய வேண்டும். அதன் பின்னர் 5 முதல் 7 வாரங்களுக்குள் பொதுத் தேர்தல் வாக்கெடுப்பை நடத்த வேண்டும்.

பொதுத்தேர்தலை நடத்துவதற்கு 11 பில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தேர்தலுக்கான நிதியை திறைசேரி ஒதுக்க வேண்டும். தேர்தலை நடத்துவதற்கு தயாராகவே இருக்கிறோம் என்றார். (ம-7)

# தாய்க்கட்சிக்குத் திரும்புமாறு தூதுவிட்டது ஐ.தே.க மறுத்தது ஐ.ம. சக்தி

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைந்து செயற்படுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை நிராகரிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

அத்துடன் தாம் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்திருப்பதாகவும் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவையே பிரதமர் வேட்பாளராக அறிவிப்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இந்த முடிவு கட்சி கூட்டத்தில் ஒருமனதாக எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இது குறித்து கருத்துரைத்த சஜித் பிரேமதாஸ,

தனக்கும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் எந்தவித மான தொடர்பும் இல்லை என்று தெளிவுபடுத்தினார்.

பொதுத் தேர்தலை இலக்கு வைத்து பிரசாரம் செய்ய ஐக்கிய மக்கள் சக்தி தயாராகியுள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி.

நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு சமூகங்களில் இருந்து கிடைத்த ஆதரவை ஒப்புக்கொண்ட அவர், இலங்கையின் முன்னேற்றத்திற்கான தனது அர்ப்பணிப்பு தொடரும் என்று கூறினார்.

நீங்கள் சிங்களவர், தமிழ், முஸ்லிம், பர்கர் அல்லது வேறு எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, நீங்கள் எந்த அரசியல் சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டாலும் சரி, உங்கள் நம்பிக்கையை நான் உணர்ந்திருக்கிறேன், அவற்றை என்னுடன் எடுத்துச் செல்கிறேன்.

என்னை நம்பியதற்கு உங்கள் அனைவருக்கும் நன்றி, தகுதியான எதிர்காலத்திற்காகப் போராடுவதை நாங்கள் ஒருபோதும் நிறுத்தமாட்டோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# ஹெரோயினுடன் சந்தேகநபர் கைது

களுத்துறை, பேருவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகல்கந்த பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (23) கைது செய் யப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

பேருவளை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மினுவாங்கொடை பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 303 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.


இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பேருவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


## வேலைவாய்ப்பு

இலங்கையில் முன்னணிக் காப்புறுதி நிறுவனத்திற்கு யாழ். கிளையில் பணியாற்றக்கூடிய காப்புறுதி விற்பனை முகாமையாளர் மற்றும் காப்புறுதி ஆலோசகர்கள் வேண்டப்படுகின்றனர்.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
கீழுள்ள Whatsapp இலக்கத்திற்கு விபரங்களை அனுப்பவும்.
077 171 2096
(2113)


# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பையாபிள்ளை சரோஜினிதேவி (ராசாத்தி)



தோற்றம் 10.05.1936 | மறைவு 22.09.2024

இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் செட்டிவளவு ஒழுங்கை இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பையாபிள்ளை சரோஜினிதேவி (ராசாத்தி) அவர்கள் 22.09.2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பரமு - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுப்பையாபிள்ளையின் அன்பு மனைவியும் விக்கினேஷ்வரராஜா, மகேஸ்வரன் (கனடா), அமரர் புவனேஸ்வரன் மற்றும் ஜெயகௌரி, ஆனந்தகௌரி (சமுர்த்தி முகாமையாளர் - சண்டிலிப்பாய்), அற்புதகௌரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரவதனி, விமலாதேவி (கனடா), சிவகுமார் (குமார் பந்தல்), ஜெயக்குமார், சற்குணதாஸ்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான மங்கையற்கரசி, ஆயிலியம், ஞானானந்தம், சதானந்தம் மற்றும் ஜெயமணி(நீர்கொழும்பு) சச்சிதானந்தம் (நீர்கொழும்பு), அன்னலட்சுமி, அருளானந்தம்(கனடா), புஷ்பராணி(கனடா), செல்வராணி(ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை, பூபாலசிங்கம்,யோகம்மா மற்றும் தணிகாசலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் எழிலன் - நிருத்தனா, கஜானன் - கஸ்தூரி, பார்த்திபன், ஹரிகரன், சஜீபன், அனோஜன், கௌசிகன், சந்தியா, லக்ஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (26.09.2024) நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று திருவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்

தொடர்புகளுக்கு:
சு.விக்கினேஷ்வரராஜா(மகன்) : 077 553 9964
ம.சிவகுமார் (மருமகன் - குமார் பந்தல்) : 077 352 7715

தகவல்: குடும்பத்தினர்

(2105)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
076 825 7716 (ஆகாஸ்)
(C-1248)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

புதிய பிரிவுகள் ஆரம்பம் 28.09.2024

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AA1, AA 2, AA3)
G. C. E. O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level - I,II

வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF

Certificate Course in English

Further Details : Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/ 021 222 9149
- 077 440 5917
(C-1250)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல கட்டட நிறுவனம் ஒன்றிற்கு
மேசன் (Meason)
உதவியாளர் (Labour)
தேவை.
076 200 4827
077 558 8835
(374)

## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)
(375)

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
194, Chapel Street, Jaffna.
College Of International Migration Skills
077 7068 777 / 077 7719 322
(C-1247)

## V2 VISA SERVICES

கனடா
077 77 20 322
077 7719 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1247)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org